தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சென்னிமலையில் மானிய விலையில் வேளாண்மைக் கருவி வழங்கல்

**பெருந்துறை,**

தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை மூலமாக, தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் திட்டத்தின் கீழ், சென்னிமலை வேளாண்மை விரிவாக்க மையத்தில், மானிய விலையில் வேளாண் கருவி வழங்கும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, சென்னிமலை ஒன்றியக் குழுத் தலைவர் கே.ஏ. கருப்பசாமி தலைமை வகித்து, முருங்கத்தொழுவு கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி என்பவருக்கு 30 ஆயிரம் மானியத்தில் சுழற் கலப்பை கருவியை வழங்கினார்.

சென்னிமலை வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி முன்னிலை வகித்தார். முருங்கத்தொழுவு ஊராட்சி முன்னாள் தலைவர் டி.கே.சாமிநாதன் மற்றும் முன்னோடி விவசாயிகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

சென்னிமலை வேளாண் அலுவலர் ராஜாத்தி நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சுதர்சன், கார்த்திகேயன், சிவக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 44.34 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 44.34 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 495 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.2 டி.எம்.சி.

**ஈரோடு மாட்டுச்சந்தையில் கொள்முதல் செய்ய மகாராஷ்டிர வியாபாரிகள் ஆர்வம்**

**ஈரோடு,**

ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் மாடுகளை வாங்க மகாராஷ்டிர வியாபாரிகள் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

வாரந்தோறும் புதன், வியாழக்கிழமைகளில் நடைபெறும் ஈரோடு மாட்டுச்சந்தையில் ஈரோடு, திருப்பூர், கரூர், திண்டுக்கல், நாமக்கல், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது மாடுகளை விற்பனை செய்து வருகின்றனர். இவற்றை கர்நாடகம், கேரளம், ஆந்திரம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்வது வழக்கம். கடந்த ஒரு மாதமாக இச்சந்தைக்கு வரும் மாடுகள், எருமைகளின் வரத்து அதிகரித்துள்ளது. தீவனப் பற்றாக்குறை காரணமாக எருமைகள், மாடுகளை விற்பனை செய்துவருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கடந்த வாரம் இச்சந்தைக்கு 450 பசுக்களும், 350 எருமைகளும் மட்டும்தான் வந்தன. ஆனால், இந்த வாரம் 550 பசுக்கள், 400 எருமைகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன.

இருப்பினும் விலையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை. பசுக்கள் ரூ.18,000 முதல் ரூ.35,000 வரையிலும், எருமைகள், ரூ.16,000 முதல் ரூ.35,000 வரையிலும் விற்பனை செய்யப்பட்டதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த வாரம் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த 150 வியாபாரிகள் பசுக்களை கொள்முதல் செய்ய சந்தைக்கு வந்திருந்தனர். இவர்கள் ஆண்டுதோறும் ஜனவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வருவது வழக்கம் என்றும், இந்த ஆண்டு பிப்ரவரி கடைசி வாரத்தில் தான் இவர்கள் வந்துள்ளதாகவும் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

**உளுந்து, பயறு, எள்ளு பயிர் காப்பீடுக்கு இன்று கடைசி நாள்**

**தஞ்சாவூர்,**

உளுந்து, பயறு, எள் பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் தங்கள் பயிருக்குக் காப்பீடு செய்ய வெள்ளிக்கிழமை (பிப்.28) கடைசி நாள் என பயிர் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

உளுந்துக்கு ஏக்கருக்கு ரூ. 132, பயறுக்கு ரூ. 87, எள்ளுக்கு ரூ. 238 என பிரிமிய தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எத்தனை ஏக்கருக்கு காப்பீடு செய்கிறோமோ அதற்கான தொகையை அக்ரிகல்சுரல் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட் என்ற பெயரில் வெள்ளிக்கிழமையே வரைவோலை எடுத்து கிராம நிர்வாக அலுவலரிடம் சிட்டா அடங்கல் அல்லது பயிர் செய்யப்பட்டதுக்கான சான்றிதழுடன் திருவையாறு வடக்கு வீதியில் செயல்படும் மா.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன அலுவலகத்தில் அதற்கான படிவத்தை நிறைவு செய்து கொடுக்கலாம். அல்லது **9443780661** என்ற எண்ணில் தொடர்பு கொண்டு படிவத்தை கொடுக்கலாம்.

## நாமக்கல் வேளாண் விற்பனை சங்கத்தில் ரூ.1.30 கோடிக்கு பருத்தி ஏலம்

**நாமக்கல்,**

வரத்து அதிகரித்து வருவதை அடுத்து, நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 7000 மூட்டை பருத்தி வந்தது. அது மொத்தம் ரூ.1.30 கோடிக்கு ஏலம் போனது.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்துக்கு நாமக்கல், சேலம், திருச்சி, கரூர் மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வருகின்றனர். வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 7000 மூட்டை பருத்தி வந்தது.

அவற்றில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4700 முதல் ரூ.5009 வரையும், டிசிஹெச் முதல் தரம் குவிண்டால் ரூ.6500 முதல் ரூ.7100 வரையும், இரண்டாம் தரம் ரூ.5200 முதல் ரூ.5780 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5600 முதல் ரூ.5779 வரையும் என மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.1.30 கோடிக்கு விலை போனதாக கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்க அலுவலர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் வியாழக்கிழமை (பிப்.20) நடைபெற்ற ஏலத்துக்கு 9000 பருத்தி மூட்டைகள் வந்தன. அவற்றில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4877 முதல் ரூ.5379 வரையும், டிசிஹெச் முதல் தரம் ரூ.6941 முதல் ரூ.7406 வரையும், இரண்டாம் தரம்

ரூ.5319 முதல் ரூ.5591 வரையும், சுரபி ரூ.5500 முதல் ரூ.6200 வரையும் என மொத்த பருத்தியும் ரூ.1.70 கோடிக்கு ஏலம் போனது.

அறுவடை பருவம் என்பதால் கடந்த சில வாரங்களாகவே பருத்தி வரத்து அதிகப்படியாக இருந்து வருகிறது. இந்த வரத்து மார்ச் மாத இறுதி வரை நீடிக்கும் என்றும் அலுவலர்கள் தெரிவித்தனர்.

## தமிழக - ஆந்திர மீனவர்களிடையே பேச்சுவார்த்தையில் உடன்பாடு

**பொன்னேரி,**

பழவேற்காடு ஏரியில் தமிழகம் மற்றும் ஆந்திர மாநில மீனவர்களிடையே நடைபெற்ற மோதலை அடுத்து நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு ஏற்பட்டது.

பொன்னேரி வட்டத்தில் உள்ள கடலோரப் பகுதியான பழவேற்காட்டில் 15 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் புலிகாட் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 24 மீனவ கிராமங்களைச் சேர்ந்தவர்களும், தமிழக பகுதியில் உள்ள 12 மீனவ கிராமங்களைச் சேர்ந்தவர்களும் மீன்பிடித்தொழில் செய்து வருகின்றனர். பழவேற்காடு ஏரி, இரண்டு மாநில எல்லைக்குள் அமைந்துள்ளதால் தமிழக, ஆந்திர மீனவர்கள் இடையே அவ்வப்போது மீன் பிடிப்பதில் மோதல் ஏற்படும். இந்நிலையில் கடந்த 20 நாள்களாக ஆந்திர மாநில எல்லையில் உள்ள வெங்கடேசப்பெருமாள் நகர் உள்ளிட்ட மீனவ கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தமிழக எல்லைக்குள் மீன்பிடித்துச் செல்வதாக பழவேற்காடு மீனவர்கள் பொன்னேரி கோட்டாட்சியர் மேனுவல்ராஜிடம் புகார் தெரிவித்திருந்தனர். இதையடுத்து பழவேற்காடு மீனவர்கள் அங்கு சென்று தமிழக எல்லைக்குள் விரிக்கப்பட்டிருந்த வலைகளை எடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மீனவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்திருந்தனர்.

இதையடுத்து பொன்னேரி கோட்டாட்சியர் மேனுவல்ராஜ் மற்றும் நாயுடுபேட்டை கோட்டாட்சியர் தலைமையில் இரு மாநில மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால் இதில் சுமுகத் தீர்வு எட்டப்படவில்லை.

இந்நிலையில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 24 கிராம மீனவர்கள் கடந்த ஞாயிற்றுகிழமை 400-க்கும் மேற்பட்ட படகுகளில் பழவேற்காடு ஏரியில்

மீன்பிடித்தொழிலுக்கு சென்றதாக கூறப்படுகிறது. ஆனால் பழவேற்காடு மீனவர்கள் காவல்துறையினரிடம் தங்களைத் தாக்குவதற்காகதான் ஆந்திர மீனவர்கள் வருவதாக புகார் அளித்தனர்.

இதன்பேரில் அங்கு பொன்னேரி டி.எஸ்.பி. எட்வர்ட் தலைமையில் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது போலீஸார் முன்னிலையில் தமிழக மீனவர்கள் 4 பேரை ஆந்திர மீனவர்கள் தாக்கியுள்ளனர். இந்நிலையில் இரு மாநில மீனவர்களிடையே சமாதானப் பேச்சுவார்த்தை, பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வமணி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், ஆந்திர பகுதி மீனவர்களின் வலைகள் சேதமடைந்ததற்கு ரூ.6 லட்சம் இழப்பீடு வழங்குவது, அவரவர்களுக்கு உள்ள எல்லைப் பகுதிகளில் மீன்பிடித்தொழில் செய்வது உள்ளிட்ட உடன்பாடுகள் ஏற்பட்டது.

இந்த சமாதான நடவடிக்கையை இரு மாநில மீனவர் தரப்பு சங்க நிர்வாகிகளும் ஏற்றுக்கொண்டு தீர்மானங்களில் கையெழுத்திட்டனர்.

## இன்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

**ஸ்ரீபெரும்புதூர்,**

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான மாதாந்திர குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில்: காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக இன்று வெள்ளிக்கிழமை 11 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் ஆட்சியர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்துக்கொண்டு வேளாண்மை துறை மற்றும் அதன் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானிய விலையில் கால்நடை தீவன விற்பனை மையம் துவக்கம்**

**தாராபுரம்,**

மானிய விலையில் கால்நடை தீவன விற்பனை மையத் துவக்க விழா தாராபுரத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கால்நடை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் டாக்டர். சந்திரசேகரன் தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பி.ரமேஷ் கலந்து கொண்டு தீவனம் பெறும் பயனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கி விற்பனையை துவக்கி வைத்தார்.

மானிய விலையில் விவசாயிகளுக்கு தீவனம் வழங்க அரசு ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு கால்நடைக்கு 3 கிலோ என்ற அடிப்படையில், ஒரு விவசாயிக்கு

5 கால்நடைகள் என கணக்கீடு செய்யப்பட்டு, கிலோ ரூ. 2 என்ற விலையில் தீவனங்கள் வழங்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கீழ்பவானி அணையில் இருந்து எள் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும்**

**திருப்பூர்,**

கீழ்பவானி அணையில் இருந்து எள் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் வியாழக்கிழமை வலியுறுத்தப்பட்டது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் த.பாரிவேல், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ஷெரீப், கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் பாபு உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள், பாசன சபைத் தலைவர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்றனர்.

இதில் விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது:

என்.எஸ். பழனிச்சாமி: திருப்பூர் வடக்கு உழவர் சந்தை, பல்லடம் உழவர் சந்தையில் விவசாயிகளுக்கு கழிப்பிட வசதி செய்து தர வேண்டும்.

பல்லடம் வட்டமலைபாளையம் குரையான் குட்டையை நமக்கு நாமே திட்டத்தில் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நல்லசாமி: கீழ்பவானி அணையில் தற்போது 3.2 டி.எம்.சி. தண்ணீர் மட்டும் உள்ளது. இதைக் கொண்டு, கடந்த 2 ஆண்டுகளாக பாசனம் பெறாத பகுதிகளில் எள் சாகுபடி செய்ய தண்ணீர் திறக்க வேண்டும். பாசனத்திற்கான நீர் நிர்வாகம் முறைப்படுத்தப்பட வேண்டும். பொதுப்பணித்துறையின் தவறான நீர் நிர்வாகம் காரணமாக பவானி பாசன விவசாயிகளிடம் மோதல் போக்கு உருவாகி உள்ளது என்றார்.

இதில், விவசாய அமைப்பினர் தங்கள் கோரிக்கைகள் குறித்த மனுக்களை ஆட்சியரிடம் அளித்தனர்.

## கோமாரி நோய்த் தடுப்பு:காங்கேயனூரில் கிராம சபைக் கூட்டம்

**போளூர்,**

கோமாரி நோய் தடுப்பு குறித்த போளூரை அடுத்த காங்கேயனூர் ஊராட்சியில் மதுராசோழங்குப்பம் கிராமத்தில், கிராம சபைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அன்பழகன் தலைமை வகித்தார். கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க மாடு, ஆடு, கோழிகள் உள்ளிட்டவற்றுக்கு மார்ச் 1 முதல் 25 வரை கிராமத்தில் தடுப்பூசி போடுவது

என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஊராட்சி துணைத் தலைவர் ராஜேந்திரன், மன்றச் செயலர் கவிதா முருகதாஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் பொறுப்பேற்பு

**தருமபுரி / கிருஷ்ணகிரி,**

தருமபுரி கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப் பதிவாளராக கே.அர்தனாரீஸ்வரன் வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர், இதற்கு முன்பு ஈரோடு மாவட்டம் நம்பியூர் வட்டக் கூட்டுறவு சார்பதிவாளராகப் பணியாற்றி பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப் பதிவாளராக டி.ரத்தினவேலு வியாழக்கிழமை பொறுப்பேற்றார்.

இதற்கு முன்னர், இவர் தருமபுரி மாவட்ட கால்நடைத் துறையின் கூட்டுறவுச் சார் பதிவாளராகப் பணியாற்றி தற்போது பதவி உயர்வு பெற்றுள்ளார்.

## அரசு சேமிப்புக் கிடங்கிற்கு வைக்கோல் வழங்க நாளைக்குள் விண்ணப்பிக்கலாம்

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டத்தில் அரசால் நடத்தப்படும் சேமிப்புக் கிடங்கிற்கு வைக்கோல் வழங்க விரும்புவோர் விலையைக் குறிப்பிட்டு வருகிற சனிக்கிழமைக்குள் (மார்ச் 1)விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில் வறட்சிக் காலத்தில் தீவனப் பற்றாக்குறையைச் சமாளிக்க பெரியாம்பட்டி, அரூர் கால்நடை மருந்தகங்களில் வைக்கோல் சேமிப்புக் கிடங்கு ஏற்படுத்தப்பட்டு விற்பனை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் வைக்கோல் விற்பனை செய்ய வேண்டியுள்ளதால் ஒரு டன் வைக்கோல் சோளதட்டை ஈரப்பதம் 10 சதத்துக்கு மிகாமலும், பூஞ்சை, சேறு, மக்கிய துர்நாற்றம் இல்லாமல் 21 கிலோ கொண்ட கட்டுகளாக கட்டி சேமிப்பு கிடங்கில் கொண்டு வந்து சேர்க்க ஏற்படும் வாகன வாடகை, ஏற்று, இறக்குக் கூலியுடன் விலையைக் குறிப்பிட்டு கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநருக்கு வருகிற சனிக்கிழமைக்குள் (மார்ச் 1) விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேல்பட்ட போட்டியாளர்களால் ஒரே தொகை குறிப்பிடப்பட்டிருந்தால் மாவட்ட நிர்வாகக் குழுவின் முடிவே இறுதியானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு தானிய உற்பத்தி 1.252 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர வாய்ப்பு

**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி 1.212 லட்சம் மெட்ரிக் டன்னில் இருந்து 1.252 லட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் வாய்ப்புள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் குளிர்கால சராசரி மழையளவான 16.8 மி.மீ. கிடைக்கவில்லை. தற்போது, 12,313 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட நெல், 17,108 ஹெக்டேர் சிறுதானியப்பயிர்கள், 7,381 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட பயிறுவகை பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

மாவட்டத்தின் மொத்த தானிய உற்பத்தி இலக்கு 1.212 லட்சம் மெட்ரிக் டன்னாகும். இப்போது நெல், சிறுதானிய பயிர்களில் மேற்கொள்ளப்பட்ட பயோமெட்ரிக் கணக்கீட்டின்படி மொத்த உற்பத்தி 1.252 லட்சம் மெட்ரிக் டன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டத்தில் உரங்கள் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா 735 மெ.டன், டிஏபி-431மெ.டன், பொட்டாஷ்-624 மெ.டன், கலப்பு உரங்கள் 1,025 மெ.டன் இருப்பில் உள்ளது.

நடப்பாண்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் 800 ஹெக்டேரில் பழக்கன்றுகள், காய்கறி விதைகள், மலர்கள் ஆகியன 50 சதவீத மானியத்தில் 1,427 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மூலிகைப்பயிர் சாகுபடி இயக்கத் திட்டத்தில் 93 விவசாயிகளுக்கு 30 ஹெக்டேரில் காந்தல்மலர் சாகுபடிக்கு மானியமாக ரூ. 20.62 லட்சமும், 10 ஹெக்டேரில் கூர்க்கன் மூலிகைப்பயிர் சாகுபடிக்கு மானியமாக ரூ. 86,000 வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 19,679 விவசாயிகளுக்கு சுமார் ரூ. 11 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**தூர்வாரும் பணியைக் கண்காணிக்கக் குழு அமைப்பு**

**தஞ்சாவூர்,**

தூர்வாரும் பணியைக் கண்காணிக்க விவசாயிகளை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

திருவிடைமருதூர் பாஸ்கரன்: நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மூட்டைகளைத் தூக்க உள்ளூர்காரர்களை நியமிக்கக் கூடாது. வெளியூர்காரர்கள்தான் சரியாகப் பணியாற்றுவர். உள்ளூர் ஆள்களை நியமித்தால் அடியாள்கள் மூலம் மூட்டைக்கு லஞ்சம் வாங்குகின்றனர். இதுபோன்று பல முறைகேடுகள் நிகழ்கின்றன. தூர்வாரும் பணியை முன்னதாகத் தொடங்கினால் தேர்தல் நடத்தை விதிமீறல் பிரச்னை வராது. மேலும், பணிகளையும் மேற்கொள்ள வாய்ப்பாக அமையும். இந்தப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட இடங்களில் விளம்பரப் பலகை அமைக்க வேண்டும்.

ஆட்சியர்: மாவட்டத்தில் தூர்வாரும் பணி தொடங்கி நடைபெறுகிறது. இந்தப் பணி தேர்தல் நடத்தை விதிமீறலில் வராது என்பதால் தொடரும். இந்தப் பணி சரியாக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க விவசாயிகள், பொதுப் பணித் துறையினர், நில அளவைத் துறையினர் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

அன்னப்பன்பேட்டை எம்.செல்வராஜ்: ஜம்பு காவிரி வாய்க்கால் மூலம் திட்டை, அன்னப்பன்பேட்டை உள்பட 6 ஊராட்சிகளுக்குள்பட்ட ஊர்கள் பயன்பெறுகின்றன. இந்த வாய்க்காலைத் தூர்வாருமாறு 2011 முதல் மனு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வாய்க்காலின் மேற்குப் பகுதியில் இதுவரை தூர்வார நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மனு அளித்தும் இதுவரை பதில் வரவில்லை.

பொதுப் பணித் துறை அலுவலர்: மொத்தம் 19 கி.மீ. தொலைவுள்ள இந்த வாய்க்காலில் கடந்தாண்டு 10 கி.மீ. தொலைவுக்குத் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டது. நிகழாண்டு மீதமுள்ள 9 கி.மீ. தொலைவுள்ள பகுதியில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

கரும்பு விவசாயிகள் சங்கச் செயலர் பி. கோவிந்தராஜ்: குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் நடைபெறும் இணை மின் நிலையப் பணியை விரைவாக முடித்து, நிகழாண்டே மின் உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராயமுண்டான்பட்டி வெ.ஜீவகுமார்: கோடை நெல் சாகுபடி ஏறத்தாழ 16,000 ஹெக்டேரில் மேற்கொள்ளப்படுகிறது. தண்ணீர்ப் பற்றாக்குறையால் பயிர்கள் பாதிக்கப்படும் அச்ச நிலை உள்ளது. எனவே, மேட்டூர் அணையிலிருந்து குறிப்பிட்ட காலத்துக்குக் கூடுதலாகத் தண்ணீர் திறந்துவிட வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பெருமளவில் முறைகேடுகள் நிகழ்வதைத் தடுக்க வேண்டும்.

காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத் தலைவர் ஏ.கே.ஆர். ரவிச்சந்தர்: நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகை வங்கி மூலம் தரப்படும் திட்டத்தை வரவேற்கிறோம். இந்தத் திட்டம் வேண்டாம் என சிலர் போராட்டம் என்ற பெயரில் நாடகம் நடத்துகின்றனர். அதேசமயம், இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகளைக் கேட்காமல் வங்கியாளர்கள் நிலுவையில் உள்ள கடன் தொகைக்காகப் பிடித்தம் செய்யக் கூடாது.

ஆட்சியர்: இது நல்ல திட்டம் என்பதால் இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எத்தனையோ சலசலப்புக்கு இடையே இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை ரூ. 1.36 கோடிக்கு வங்கி மூலம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் இடைத்தரகர்களின் அடாவடியிலிருந்து விடுபடலாம். இதில் பட்டா, சிட்டா அடங்கல் போன்றவற்றை கேட்கமாட்டார்கள். மேலும், வங்கியில் பிடித்தம் செய்யவும் மாட்டார்கள்.

## திருவாரூரில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**திருவாரூர்,**

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் சி.நடராசன் தலைமை வகித்தார். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

நமது நெல்லைக் காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன்: அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் பணப்பட்டுவாடா செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், மீண்டும் கொள்முதல் நிலையங்களிலேயே பட்டுவாடா செய்யப்படுகிறது. இதில் பல முறைகேடுகள் நடைபெறுவதால், கூட்டுறவு வங்கிகள் மூலம் நெல் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா செய்வதை கட்டாயமாக்க வேண்டும்.

விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மாசிலாமணி: பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகை விவசாயிகளுக்கு வழங்கியதில் குளறுபடிகள் நடைபெற்றுள்ளது.

விவசாயிகளுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய தொகை கிடைக்கவில்லை. வலங்கைமான் பகுதியிலுள்ள நல்லூரில் இதுவரை பயிர்க் காப்பீடுத் தொகை வழங்கவில்லை. வணிக வங்கிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கூட்டுறவு வங்கிகளுக்கு முக்கியத்துவம் அளிக்காததால், குளறுபடிகள் நடைபெற்றுள்ளது.

கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் தம்புசாமி:

நீலக்குடி மத்தியப் பல்கலைக்கழகப் பகுதியில் வெட்டாற்றின் கரையோரம் நெடுஞ்சாலைத்துறை சார்பில் தடுப்புச் சுவர் எழுப்பியுள்ளனர். வெண்ணாற்றின் வடிகாலாக இருக்கும் வெட்டாற்றில் இந்தச் சுவர் அமைத்திருப்பது வெள்ளக் காலங்களில் வலங்கைமான், கொரடாச்சேரி பகுதியில் ஆற்றின் கரைகளில் உடைப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

இதுதொடராமல் இருக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கரும்புக்கு அறிவிக்கப்பட்ட ஆதாரவிலை டன்னுக்கு ரூ. 2,650 இன்னும் விவசாயிகளுக்கு வழங்கவில்லை.

விவசாயிகள் நலச் சங்க மாவட்டத் தலைவர் சேதுராமன்: மாவட்டத்தில் தூர்வாரும் பணிகளை தொடங்கும் முன்பு விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்குபெறும் கூட்டத்தை நடத்தி அதில் தெரிவிக்கப்படும் கருத்துகளுக்கு ஏற்ப அவசியம் உள்ள பகுதிகளுக்கு தூர்வாரும் பணிகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பு.மணிமாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தூத்துக்குடியில் மீனவ இளைஞர்களுக்கு ஆழ்கடல் நீச்சல் பயிற்சி**

**தூத்துக்குடி,**

தூத்துக்குடியில் மீனவ இளைஞர்களுடன் கடலோரப் பாதுகாப்புக் குழும ஏடிஜிபி சைலேந்திரபாபு வியாழக்கிழமை ஆழ்கடல் நீச்சல் பயிற்சி மேற்கொண்டார்.

தமிழகம் முழுவதும் கடலோரப் பகுதிகளில் மீனவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடலோரப் பாதுகாப்பு குழும போலீஸார் பல்வேறு பயிற்சிகளை நடத்தி வருகின்றனர்.

மேலும், கடலோரப் பகுதிகளில் போலீஸாருடன் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபடும் வகையில் மீனவ இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்காக தூத்துக்குடி கடற்கரை பகுதியைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு முடித்த மீனவர்கள் 35 பேர் அண்மையில் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு முதல்கட்டமாக ஆழ்கடல் நீச்சல் பயிற்சி கடந்த மூன்று நாள்களாக அளிக்கப்பட்டது.

வான்தீவு பகுதியில் நடைபெற்ற பயிற்சியின்போது விபத்தில் சிக்கும் மீனவர்களை மீட்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியில் தமிழக கடலோரப் பாதுகாப்புக் குழும ஏடிஜிபி சைலேந்திரபாபு கலந்து கொண்டு மீனவ இளைஞர்களுக்கு பல்வேறு பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி அவர்களுடன் பயிற்சி மேற்கொண்டார்.

இந்த இளைஞர்களுக்கு தொடர்ந்து பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படும் என அவர் தெரிவித்தார். இதையடுத்து தூத்துக்குடி திரேஸ்புரத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மீனவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொண்டார்.

தூத்துக்குடி கடல் பகுதியில் சில நாள்களுக்கு முன் மிதந்து வந்த 5 கஞ்சா மூட்டைகள் குறித்து போலீஸாருக்கு தகவல் தெரிவித்த மீனவர்களுக்கு நிகழ்ச்சியின்போது பரிசு வழங்கப்பட்டது.

கடலோரப் பகுதிகளில் குற்றங்களை தடுக்கும் வகையில் சந்தேகத்துக்கிடமான நபர்கள் நடமாட்டம் மற்றும் பொருள்கள் குறித்து உடனடியாக 1093 என்ற இலவச அழைப்புக்கு தகவல் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில், ஏடிஜிபி சைலேந்திரபாபு பேசியதாவது: தமிழக கடலோரப் பகுதிகளில் புதிதாக 30 காவல் நிலையங்கள் தொடங்கப்படவுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் நிகழாண்டு இறுதிக்குள் 4 காவல் நிலையங்கள் தொடங்கப்படும். 60 அடி நீளம் கொண்ட அதிநவீன படகுகள் கடலோரக் காவல் பாதுகாப்புக் குழுமத்துக்கு வாங்கப்பட உள்ளன. கடந்த ஆண்டில் 168 மீனவர்கள் விபத்தில் சிக்கியபோது மீட்கப்பட்டுள்ளனர் என்றார் அவர்.

தூத்துக்குடி எஸ்.பி. மா. துரை மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்ற அனுமதிக்க முடியாது: ஆட்சியர்

**திருநெல்வேலி,**

விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்ற அனுமதிக்க முடியாது என, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் மு.கருணாகரன் தலைமையில், ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடந்தது.

இக் கூட்டத்தில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த விவசாயிகள் கூறியது:

குறிச்சி, பாளையங்கோட்டை, பாளையங்குளம் பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் பலவும் சரளை மண் அடித்து விதிகளை மீறி வீட்டுமனைகளாக மாற்றவும், கட்டடங்கள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், முள்வேலிகளை அமைத்து அருகில் உள்ள விளைநிலங்களுக்குச் செல்ல முடியாத வகையில் தடை ஏற்படுத்துகின்றனர். இதனால், பெரும்பாலான நிலங்கள் பயிர் செய்ய முடியாமல் தரிசாகவே கிடைக்கின்றன. எனவே, விளைநிலங்களை வேறு பயன்பாட்டுக்கு அனுமதிக்கக் கூடாது.

பட்டா மாறுதல் தொடர்பாக பகுதி வாரியாக சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. ஆனால், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை.

தென்காசி, கீழப்பாவூர் பெரியகுளத்துக்கு தண்ணீர் வரத்துக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஷட்டர்களை புனரமைக்க வேண்டும். அம்பாசமுத்திரம் உள்பட நெல்

அறுவடை நடைபெறும் அனைத்துப் பகுதிகளிலும் அரசின் கொள்முதல் மையங்கள் அமைக்க வேண்டும்.

விளைநிலங்களுக்குள் வன விலங்குகள் புகுந்து சேதம் ஏற்படுத்துவதை வனத்துறை தடுக்க வேண்டும். குறிப்பாக, யானைகள் அட்டகாசத்தால் பெரும் சேதம் ஏற்படுகிறது. யானைகளுக்கு போதிய குடிநீர், உணவு கிடைக்காத காரணத்தாலேயே விளைநிலங்களைத் தேடி வருகின்றன. அகழி, மின்சார வேலி அமைத்திருப்பதாகக் கூறினாலும் யானைகள் வருவதைத் தடுக்க முடியவில்லை. யானைகளால் கிணறுகள், மோட்டார் பம்ப் செட்டுகளும் சேதமாகின்றன என்றனர்.

இதற்கு பதில் அளித்து ஆட்சியர் மு.கருணாகரன் கூறியது: விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதை நான் பணியேற்ற நாளில் இருந்து அனுமதிப்பதில்லை. பட்டா மாறுதல் முகாமில் வழங்கப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மனுக்களை புறக்கணிக்கும் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கோடையை எதிர்கொள்ளவும், குடிநீர்ப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதுடன், பாசனத் தேவைகளையும் பூர்த்தி செய்ய மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. களக்காட்டில் வாழைகளைப் பாதுகாக்க கிடங்கு அமைக்கப்படும் என்றார் ஆட்சியர்.

இக் கூட்டத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில் 6 விவசாயிகளுக்கு ரூ.8.72 லட்சம் மானியத்தில் ரூ.21.25 லட்சத்தில் வேளாண் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மாவட்ட வருவாய் அலுவலர் பி. உமாமகேஸ்வரி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வம், வேளாண்மை இணை இயக்குநர் செளந்தரராஜன் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## விவசாய சங்க பிரதிநிதிகளுடன் வேளாண் இயக்குநர் ஆலோசனை

**புதுச்சேரி,**

புதுவையில் வேளாண் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல் குறித்த ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை வேளாண் துறை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது. வரும் 2014-2015-ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து விவசாய சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசனைக்

கூட்டம் நடந்தது. வேளாண் துறை இயக்குநர் டாக்டர் ராமமூர்த்தி தலைமை வகித்தார். விவசாயிகள் எதிர்கொள்ளும் நடைமுறை பிரச்னைகள், மற்றும் விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

சான்றுவிதை உற்பத்தியாளர்கள் சங்க பிரதிநிதிகள், துல்லிய பண்ணைய விவசாய சங்க உறுப்பினர்கள், ஆத்மா குழு விவசாயிகள், இயற்கை வேளாண் விவசாயிகள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வாழையில் அதிக மகசூல் கிடைக்க புதிய தொழில்நுட்பம்**

**அன்னூர் :** வாழையில் அதிக மகசூல் கிடைக்க, புதிய தொழில் நுட்பத்தை 50 சதவீத மானியத்தில் தோட்டக்கலைத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை:தமிழகத்தில் இரண்டு லட்சம் ஏக்கர் பரப்பில் வாழை பயிரிடப்படுகிறது. சர்வதேச சந்தைக்கு வாழை ஏற்றுமதி மிகவும் குறைவாக உள்ளது.

இதற்கு முக்கிய காரணம் சீரற்ற பழ அளவு, நிறம், பழத்தோலில் உள்ள கரும்புள்ளி, பூச்சி, நோய் தாக்குதல் ஆகியவை தான். இப்பிரச்னைகளை தீர்க்க வாழைத்தார் பாதுகாப்பு உறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது 'பாலி ப்ரோபிலேன்' என்னும் பொருளில் ஆனது. இந்த உறை, வாழைத்தார்களுக்கான காற்று, ஈரப்பதம், சூரிய ஒளி ஆகியவற்றை கட்டுப்படுத்தும் திறன் உள்ளது. இதன் மூலம், சீரான, தரமான வாழைத்தார்கள் கிடைக்கும். பூச்சி, நோய் மற்றும் பறவைகளிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும். தர உயர்வால் கூடுதல் விலை கிடைக்கும்.இந்த பாதுகாப்பு உறைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டேருக்கு மட்டும் உறை வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் பெயர் பதிவு செய்து பெற்றுக் - கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 14 நாட்களுக்கு பிறகு ராமேஸ்வரம் மீனவர்கள் நாளை மீன்பிடிக்க செல்கின்றனர்

ராமேஸ்வரம்: பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதால், 14 நாட்களுக்கு பிறகு ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் நாளை(மார்ச் 1ம் தேதி) மீன்பிடிக்க செல்கின்றனர். தமிழக, இலங்கை மீனவர்கள் கைது செய்து, இருநாட்டு சிறையில் அடைக்கப்படுவதை தடுக்க, ஜன., 27ல், சென்னையில் இருநாட்டு மீனவர்களின் பேச்சு வார்த்தை நடந்தது. இதில் முடிவு எடுக்கப்படவில்லை. ஆதனால், இலங்கையில் 2ம் கட்ட பேச்சு வார்த்தை நடத்தி, தீர்வு காண திட்டமிட்டனர். மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்க சென்றதால், பேச்சு வார்த்தை பாதிக்கும் என்பதால், பிப்., 15ம் தேதி முதல், ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாமல், படகுகளை கரையில் நிறுத்தி வைத்தனர். இந்நிலையில், 14 நாட்களுக்கு பிறகு, ராமேஸ்வரம் மீனவர்கள் நாளை மீன்பிடிக்க கடலுக்கு செல்கின்றனர்.

இதுகுறித்து ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர் சங்க தலைவர் போஸ் கூறியதாவது: இலங்கையில் நடக்கவுள்ள 2ம் கட்ட பேச்சு வார்த்தை தேதி குறிப்பிடாமல், எப்போது கூட்டம் நடக்கும் என, தெரியாத நிலை உள்ளது. இதனால், மீனவ குடும்பத்தினர் வறுமையில் பாதித்துள்ளனர். மேலும் ஏப்.,15ம் தேதி முதல், 45 நாட்களுக்கு மீன்பிடிக்க தடை காலம் வர உள்ளதால், மீனவர் நலன் கருதி நாளை மீன்பிடிக்க செல்ல உள்ளனர், என தெரிவித்தார்.

## 'இயற்கை வேளாண்மையால் மட்டுமே மண் வளத்தை காக்க முடியும்'

**உடுமலை :** "மண் வளத்தை காக்க இயற்கை வேளாண்மையை கடைபிடிக்க வேண்டும்," என, பி.ஏ.பி., பாசன திட்ட திருமூர்த்தி கோட்ட செயற்பொறியாளர் சுப்ரமணியன் பேசினார். பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு சார்பில், பி.ஏ.பி., உபகோட்டத்தில், கிராம நீரினை பயன்படுத்தும் 38 சங்கத்தினருக்கான மேம்பாட்டு பயிற்சி முகாம், உடுமலையில் நடக்கிறது.

இதில், முக்கூட்டு ஜல்லிபட்டி, கோமங்கலம் பகுதி பி.ஏ.பி., நீரினை பயன்படுத்தும் சங்கத்தினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

செயற்பொறியாளர் சுப்ரமணியன் பேசியதாவது:

பருவமழை, நிலத்தடி நீர் இல்லாத காரணங்களால், விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் போதுமான அளவு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. போதிய தண்ணீர் இல்லாததால், விவசாயத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் செயற்கை உரம், ரசாயன கலப்புகளால், விவசாய மண் பாழ்பட்டு வருகிறது. நிலத்தடி நீர் இல்லாமல் போக இதுவும் ஒரு காரணமாக உள்ளது. எனவே, விவசாயிகள் இயற்கை வேளாண் முறையை கடைபிடிக்க வேண்டும். விவசாய தொழிலையும், இதை மட்டுமே நம்பி வாழும் விவசாயிகளின் நலனுக்காகவும் நமக்கு கிடைக்கும் சிறிதளவிலான தண்ணீரை அணைகளில் தேக்கி, பாசனத்துக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதை கவனத்தில் கொண்டு விவசாயிகள் தங்களுக்கு கிடைக்கும் நீரை முறையாக பங்கிட்டு, நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்; தண்ணீர் திருட்டில் ஈடுபடக் கூடாது.

நிலத்தின் மண் வகை, மண்ணுக்கேற்ற பயிர் வகை, பயிருக்கு தேவையான தண்ணீர் அளவுகளை அறிந்து அதற்கேற்ப விவசாயம் செய்ய வேண்டும். தண்ணீரின் அருமையை கருதி, அனைத்து விவசாயிகளும், பாசன மேலாண்மையை கடைபிடிக்க வேண்டும். நிலைத்த வேளாண்மைக்கு, நீர் சிக்கனம், இயற்கை வேளாண்மையே உகந்தது என்பதை உணர்ந்து செயல்படவேண்டும்.

இயற்கை வேளாண்மையால் மட்டுமே மண் வளத்தை காப்பாற்ற முடியும். எனவே, இயற்கை வேளாண்மையை அனைத்து விவசாயிகளும் கடைபிடிக்க வேண்டும். எதிர்காலத்தேவை, சந்ததியினருக்கு பயன்படும் வகையில், மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

திட்ட பயிற்சியாளர் சாம்சன், நீர் சிக்கனம், நீரினை பயன்படுத்தும் சங்கத்தினர் நீரை பகிர்ந்தளிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், சங்கத் தலைவர் மற்றும் துணைக்குழுவினருக்கு உள்ள அதிகாரங்கள், அவர்களுக்கான உரிமைகள் குறித்து பேசினார். பி.ஏ.பி., உபகோட்ட உதவி செயற்பொறியாளர் ஜெயராமன், பொறியாளர் பாலசுப்ரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### சுத்தமான பால் நுகர்வுக்கு சில்லிங் பிளாண்ட் மூன்று இடங்களில் அமைக்க ஆவின் முடிவு

**ஈரோடு**: ""ஆவினுக்கு பால் வழங்கும் விவசாயிகளிடம் இருந்து, சுத்தமான பால் நுகர்வுக்கு, மாவட்டத்தில் சுண்டக்காபாளையம், ராமலிங்காபுரம், பட்லூர் நால்ரோடு ஆகிய, மூன்று இடங்களில், சில்லிங் பிள ொண்ட் (குளிர்பதன கிடங்கு) அமைக்கப்படும்," என, ஈரோடு ஆவின் தலைவர் ராமசாமி தெரிவித்தார். மத்திய அரசு, பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. 2012ம் ஆண்டு, தூய்மையான பால் உற்பத்தி

திட்டத்துக்காக, ஐந்து கோடி ரூபாயை, ஈரோடு ஆவினுக்கு ஒதுக்கீடு செய்தது. இம்மாவட்டத்தில், 700 கூட்டுறவு சொசைட்டிகளை அமைத்து, தினமும், 2.30 லட்சம் லிட்டர் பாலை, ஆவின் கொள்முதல் செய்கிறது. இதில், 73 ஆயிரம் லிட்டர் பாலை பதப்படுத்தி, பாக்கெட்களில் அடைத்து, வினியோகிக்கின்றனர். எஞ்சிய பாலை, சென்னைக்கு அனுப்புகின்றனர்.

விவசாயிகளிடம் பால் கொள்முதல் செய்து, இருப்புவைத்து, எடுத்துச்சென்று, பதப்படுத்தி, விற்பனை செய்யும் வரை, தூய்மையாக இருக்க திட்டமிட்டனர். மத்திய அரசின், ஐந்து கோடி ரூபாய் நிதியில், பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து, ஈரோடு ஆவின் தலைவர் ராமசாமி, நிருபர்களிடம் கூறியதாவது: தூய்மையான பால் உற்பத்தி மற்றும் நுகர்வு குறித் து, விவசாயிகளுக்கு விழி ப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. ஈரோடு ஆவினுக்கு முதற்கட்டமாக, 3.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளனர். மாவட்டத்தின், 8 இடங்களில், 1.84 கோடி ரூபாய் மதிப்பில், ஐந்தாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பாலை, பாதுகாக்கும் குளிர்பதன கிடங்குகள் அமைக்கும் பணி நடக்கிறது. இரண்டு மாதத்தில் பயன்பாட்டுக்கு வந்துவிடும். சொசைட்டிக்கு பால் வழங்கும் விவசாயிகள், 2,868 பேருக்கு, ஏழு லட்சம் ரூபாய் மதிப்பிலான, ஐந்து லிட்டர் கொள்ளளவு கொண்ட எவர்சில்வர் கேன் வழங்கப்பட்டுள்ளது. கறந்த பாலை, கேன்களில் ஊற்றும் முன், வடிகட்ட, மஸ்லின் துணி வழங்கி உள்ளோம்.

அதிக பால் கொள்முதல் செய்யும், எட்டு பேருக்கு, 40 லட்சம் ரூபாயில் மில்கிங் மிஷின், 126 பால் சொசைட்டிகளுக்கு, 50 லட்சம் ரூபாய் மதிப்பில், பாலின் தரத்தை கண்டறியும், மில்க் அனலைசர் கருவியும் வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் மல்லிப்பாளையம், பாலக்காட்டூர் ஆகிய இடங்களில், புதிதாக சொசைட்டிகள் ஏற்படுத்தி உள்ளோம். மேலும், இரண்டாம் கட்டமாக வழங்கப்படும் எஞ்சிய நிதியில், சுண்டாக்காபளையம், ராமலிங்காபுரம், பட்லூார் நால்ரோடு ஆகிய, மூன்று இடங்களில் புதிதாக சில்லிங் பிளாண்ட் (குளிர்பதன கிடங்கு) அமைக்கப்படும். பால் கொள்முதல், எடுத்துச்செல்தல், பதப்படுத்தி, நுகர்வோருக்கு தூய்மையாக வழங்குவதே, திட்டத்தின் நோக்கமாகும், என்றார்.

## முட்டை விலை 330 காசாக உயர்வு

**நாமக்கல்:** தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 325 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு அதிகரித்து, 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:
சென்னை, 360, பெங்களூரு, 347, மைசூரு, 353, ஹைதராபாத், 321, மும்பை, 359, விஜயவாடா, 324, கோல்கத்தா, 375, பர்வாலா, 345, டில்லி, 355. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது.
நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 54 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 67 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## கூட்டுறவு வங்கி கட்டடம் திறப்பு

**கொட்டாம்பட்டி** ; கொட்டாம்பட்டியில் கூட்டுறவு வங்கி கிளையின் கட்டடத் திறப்பு விழா மற்றும் கடன் உதவிகள் வழங்கும் விழா நேற்று நடந்தது.
அமைச்சர் செல்லூர் ராஜு தலைமை வகித்தார். எம்.எல்.ஏ., சாமி முன்னிலை வகித்தார். பஸ் ஸ்டாண்ட் பின்புறம் 19 லட்சம் ரூபாயில் கட்டப்பட்ட வங்கி கட்டடத்தை கலெக்டர் சுப்பிரமணியன் திறந்து வைத்தார். 168 பேருக்கு பால்மாடு, தானிய ஈட்டுக் கடன், சிறு வணிகக் கடனாக 108.73 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.மாவட்ட கூட்டுறவு வங்கித் தலைவர் துரைபாண்டியன், எம்.எல்.ஏ., தமிழரசன், மேலூர் நகராட்சி தலைவர் சரவணன், கொட்டாம்பட்டி ஒன்றியத் தலைவர் வெற்றிச்செழியன், துணைத் தலைவர் குலோத்துங்கன், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத் தலைவர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

**பாசன சங்கத் தேர்தலில் விவசாயிகள் பங்கேற்பதில்... சிக்கல் பட்டாவில் பெயர் இருந்தால் மட்டுமே வாய்ப்பு**

**பழநி:** திண்டுக்கல் மாவட்ட கண்மாய்கள், கால்வாய்கள், பாசன சங்கம் அமைப்பு நிர்வாகிகள் தேர்தலில், விவசாயிகள் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு கண்மாய்கள், கால்வாய்களை, விவசாயிகள் மூலம் பராமரிப்பு செய்வதாக, "பாசன சங்க அமைப்பு' ஏற்படுத்த உத்தரவிட்டு உள்ளது. இதற்கான தலைவர், உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கபடவுள்ளனர்.திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர் வட்டாரத்தில் உள்ள, கண்மாய்கள், இடதுபிரதான கால்வாய்கள் என, 105 பாசன சங்கம் அமைப்பு உருவாகஉள்ளது. பாசன விவசாயிகளுக்குள் தேர்தல் நடத்தி, ஒரு தலைவர் மற்றும் நான்கு ஆட்சிமன்ற உறுப்பினர்கள், தேர்வு செய்யப்படுகின்றனர்.இச்சங்கத்தின், செயல்பாடுகள், தேர்தல் விதிமுறைகள் குறித்து, அந்தந்த கண்மாய், கால்வாய்பாசன விவசாய கூட்டுறவு சங்கங்கள், மற்றும் விவசாயிகளிடம், பொதுபணித்துறையினர் விளக்கிவருகின்றனர்.பட்டாவில் பெயர் உள்ளவர் மட்டுமே, தேர்தலில், போட்டியிட, ஓட்டளிக்க, தகுதியானவர்கள், என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், தங்கள் பெயரில் பட்டா இல்லாதவர்கள், குத்தகைதாரர்கள், கிரையம் செய்து பட்டாமாறுதல் செய்யாத விவசாயிகள், தேர்தலில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு பட்டா மாறுதலில் முன்னுரிமை வழங்கவேண்டும் அல்லது வாரிசு சான்றிதழ் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டும், என கோரிக்கை விடுத்துஉள்ளனர்.பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: பாசன சங்க அமைப்பு, தேர்தலை மாவட்ட கலெக்டர் நடத்தவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் நடக்கிறது. பட்டாவில் பெயர் இல்லாதவர்கள் தேர்தலில் போட்டியிட, ஓட்டளிக்க முடியாது. லோக்சபா தேர்தலுக்கு முன், தேர்தல் நடத்த கூறியுள்ளனர். இருப்பினும் அதற்கான காலஅவகாசம் தற்போது இல்லை, என்றார்.

**நதிகள் இணைப்பு திட்டம் : மத்திய பிரதேசத்தில் அறிமுகம்**

**போபால்:** நாட்டிலேயே முதல்முறையாக, நதிகள் இணைப்பு திட்டத்தை, மத்திய பிரதேச, பா.ஜ., அரசு செயல்படுத்தியுள்ளது. பா.ஜ.,வைச் சேர்ந்த வாஜ்பாய், பிரதமராக இருந்த போது, நதிகள் இணைப்பிற்கான திட்டத்தை முன்மொழிந்தார். அந்த திட்டத்தை, எந்த மாநிலமும், இதுவரை பின்பற்றாத நிலையில், முதல்

மாநிலமாக, மத்திய பிரதேசம், நதிகளை இணைத்து சாதனை படைத்துள்ளது. ம.பி., - பா.ஜ., முதல்வர், சிவராஜ் சிங் சவுகான், இந்த திட்டத்தின், முதற்கட்டத்தை துவக்கியுள்ளார். இதன் படி, நர்மதா மற்றும் ஷிபாரா நதிகள் இணைக்கப்பட்டுள்ளன. நர்மதா நதி நீர், 350 மீட் டர் உயரத்திற்கு மேலேற்றப்பட்டு, அங்கிருந்து, 49 கி.மீ.,க்கு, குழாய்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டு, உஜ்ஜயின் நகரில், ஷிபாரா நதியில் விடப்படுகிறது. இந்த திட்டம் முழுமையடைந்தால், 3,000 கிராமங்கள், 72 நகரங்களுக்கு, குடிநீர் வசதி கிடைக்கும். நாட்டிலேயே முதலாவது, இந்த நதிநீர் இணைப்பு திட்டத்தை, பா.ஜ., மூத்த தலைவர், அத்வானி, கடந்த செவ்வாய் கிழமை துவக்கி வைத்தார்.

## கடலோர காவல் படைக்கு 19 அதிவிரைவு படகுகள் : மீனவ கலந்துரையாடலில் சைலேந்திரபாபு தகவல்

**தூத்துக்குடி:** கடலோர காவல்படையில் 24 படகுகள் உள்ளன. புதியதாக 10 அதிவிரைவு படகுகள் வரவுள்ளன. என தூத்துக்குடி திரேஸ்புரத்தில் மீனவர்களிடையே நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில், கடலோர காவல் படை ஏ.டி.ஜி.பி., சைலேந்திரபாபு தெரிவித்தார். மீனவ கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக கடலோர காவல்படையின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. மருத்துவமுகாம், விழிப்புணர்வு ஊர்வலங்களும் நடத்தப்பட்டுள்ளது. திரேஸ்புரத்தில் நேற்று மீனவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மீனவர்களும், கடலோர காவல் படையினரும் நண்பர்களாக பழக வேண்டும் என்பதற்காக கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. இதில் சைலேந்திரபாபு பேசியதாவது: கடற்பரப்பு அதிகளவில் உள்ளது. இதில் கடலோர காவல் படைமட்டுமே கண்காணிப்பு பணிகள் செய்து விட முடியாது. மீனவர்கள் தாங்கள் மீன் பிடிக்க கடலுக்குள் செல்லும் போது புதியதாக படகுகள், மனிதர்கள் தென்பட்டால் உடனடியாக கடலோர காவல்படையின் 1098 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். இது வரை இந்தாண்டில் மட்டும் 1098 எண்ணில் 360 அழைப்புகள் வந்துள்ளன. கடலோர காவல்படையில் 12 போலீஸ் ஸ்டேஷன்கள் உள்ளன. கடலோர பாதுகாப்பை பலப்படுத்த 30 போலீஸ் ஸ்டேஷன்கள் இந்தாண்டுக்குள் செயல்பட துவங்கும். இதில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு நான்கு போலீஸ் ஸ்டேஷன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது கடலோர காவல்படையில் 24 படகுகள் உள்ளன. புதியதாக 10 அதிவிரைவு படகுகள்

வரவுள்ளன. இது வரை கடலில் தத்தளித்த 47 படகுகளை கடலோர காவல்படையினர் மீட்டுள்ளனர். 168 மீனவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர், என அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் எஸ்.பி., துரை,மீன் வளத்துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**1507பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்பு நலதிட்ட உதவிகள் அரசு கொறடா வழங்கினார்**

**திருச்சி** : 1,507 பயனாளிகளுக்கு ரூ.66 லட்சம் மதிப் பில் உழவர் பாதுகாப்பு மற் றும் சமூகப் பாதுகாப்பு நலத்திட்ட உதவிகள் நேற்று வழங்கப்பட்டது. முதல்வரின் உழவர் பாது காப்பு மற்றும் சமூக பாது காப்பு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருவானைக்காவல் ஏகே திருமண மஹா லில் நடந்தது. கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமை வகித்தார். டிஆர்ஓ தர்ப்பகராஜ் வரவேற்றார். இவ்விழாவில் ரூ.66லட்சம் மதிப்பில் உழவர் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு நலத்திட்ட உதவி கள் 1507 பயனாளிக ளுக்கு அரசு தலைமைக் கொறடா மனோகரன் வழங்கினார். நிகழ்ச்சியில் அவர் பேசுகை யில், மக்களுக்கு திட்டங்கள் விரைவில் சென்ற டைய வேண்டும் என்ற நோக் கில் தமிழக முதல்வர் திருச்சியை திருச்சி கிழக்கு, மேற்கு என இரண்டு தாலுக்காவாகவும், மணப்பாறை வட்டத்தை மணப்பாறை, மருங்காபுரி என 2தாலுக்காவாக பிரித்துள்ளார். இதே போன்று திருச்சி வருவாய் கோட்டத்தையும் திருச்சி, ஸ்ரீரங்கம் என 2 கோட்டமாகவும் பிரித்துள் ளார் என்றார். கலெக்டர் ஜெயஸ்ரீ பேசுகை யில், உழவர் பாதுகாப்பு திட்டத்தில் திரு மண நிதியுதவி பெற எவ்வித கல்வி வரன்முறையும் இல்லை. ஆண்களுக் கென திருமண நிதியுதவி பெறும் ஒரே திட்டம் உழவர் பாதுகாப்புத் திட்டம் தான். மாவட்டத்தில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 2011-12ம் ஆண்டில் மட்டும் 7,000 பயனாளிகளுக்கு ரூ.4.5கோடி மதிப்பில், 2012-13ம் ஆண்டில் 18,000ம் பயனாளிகளுக்கும் ரூ.9கோடி மதிப்பிலும், 2013-14ம் ஆண்டு இதுவரை 16,000 பயனாளிகளு க்கு ரூ.7.50 கோடி மதிப்பிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஜெயா, எம்எல்ஏ பரஞ்ஜோதி, துணை மேயர் ஆசிக் மீரா, பிற்படுத்தப் பட்டோர் நலஅலுவலர் கதிரேசன்,

கோட்டத்தலைவர் லதா, சீனிவாசன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் அண்ணாதுரை, முத்து, ஒன்றியக் குழுத் தலைவர்கள் முத்துக் கருப்பன் (மணிகண்டம்), அழகேசன் அந்தநல்லூர்),வட்டாட்சியர் பவானி, கவுன்சிலர்கள் பச்சையம்மாள், முத்து லெட்சுமி, பெஸ்ட் பாபு, பூபதி உட்பட பலர் கலந்து கொண்டனர். ஸ்ரீரங்கம் கோட்டாட்சியர் ஜனனி சௌந்தர்யா நன்றி கூறினார்.

### 1 ம் தேதி உப்பிலியபுரம் ஒன்றியத்தில் 6 வது சுற்று கோமாரி தடுப்பூசி முகாம்

**துறையூர்,:** 1 ம் தேதி உப்பிலியபுரம் ஒன்றியத்தில் 6 வது சுற்று கோமாரி தடுப் பூசி முகாம் தொடங்குகிறது. உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனை த்து கிராமங்களிலும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்துவது தொடர் பான ஆய்வு கூட்டம் நடந் தது. திருச்சி கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் சின்னதுரை அறிவுரையின்படி உப்பிலியபுரம் ஒன் றிய அலுவலக கூட்ட அரங் கில் வட்டார வளர்ச்சி அலுவலர் கிஷன்சிங் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. கால்நடைகளை தாக்கும் கொடிய நோயான கோமாரி நோயில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க கால்நடை பராமரிப்பு துறையினரால் 6 மாதத்திற்கு ஒரு முறை தடுப்பூசி போடப்படுகிறது. இது வரை 5 சுற்று தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கூட்டத்திற்கு தலைமையேற்று பேசிய திருச்சி பிர தம மருத்துவர் டாக்டர் ராசசேகரன் வரும் 1ம் தேதி முதல் முகாம் தொடங்க இருப்பதாகவும், 6 வது சுற் றில் எவ்வித விடுபாடுமின்றி 100 சதவீத இலக்கினை எட் டிடும் வகையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள வார்டு உறுப்பினர் கள், பால் கறப்பவர்கள், உழவர் மன்றத்தினரை கொண்டு கூட்டம் நடத்தி முகாம் பற்றிய செய்தியினை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும், ஊரா ட்சி செயலர்கள், ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் முகாமில் கலந்து கொண்டு உதவிட வேண்டும் என கேட்டு கொண்டார். முகாமிற்கு கால்நடைகளை கொண்டு வரும் விவசாயி கள் அடையாள அட் டையை கொண்டு வரவேண்டும் என்றும், 6 வது சுற்று தடுப்பூசி போட்டதற்கு அடையாளமாக கொம்பில் வர்ணம் பூசிக்கொள்ள வேண்டும் எனவும், தண் டோரா மூலம் அறிவிக்க ஏற் பாடு செய்ய ஊராட்சி மன்ற தலைவர்கள் கேட்டு கொள்ளப்பட்டது. கூட்ட ஏற்பாடு களை உப்பிலியபுரம் கால் நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர் பெரிய சாமி செய்திருந்தார்.

### ரூ.7லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

**அனுப்பர்பாளையம், :** அவினாசி அருகே சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலக்கடலை ஏலம் நேற்று நடந்தது. இதில், ஆயிரம் நிலக்கடலை மூட்டைகள் வந்தன.

மொத்தம் ரூ.7லட்சத்துக்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை விட 650 மூட்டை வரத்து அதிகரித்தது. குவிண்டால் ஒன்றுக்கு(காய்ந்த) முதல் ரக நிலக்கடலை ரூ.3000 முதல் ரூ3520 வரை, 2வது ரக நிலக்கடலை ரூ.2950 முதல் ரூ.3240 வரை விலை போனது. பச்சை நிலக்கடலை வரத்து இல்லை. குன்னத்தூர், ராயர்பாளையம், லூர்துபுரம், மங்கரசவலையபாளையம், அவினாயிபுதூர், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம், தன்டுக்காரன்பாளையம் ஆகிய பகுதிகளை சேர்ந்த 72 விவசாயிகளும், 9 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

**பயறுவகை தொழில் நுட்பம் குறித்து நடமாடும் விவசாய முகாம்**

**புதுக்கோட்டை,:** புதுக்கோட்டை மாவட்டத்தில் பயறு வகைகளை பயிரிடத் தேவையான தொழில் நுட்பங்கள் மற்றும் இதர தகவல்களை விவசாயிகளின் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று நடமாடும் முகாம்கள் மூலமாக தெரிவிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ரவிசந்திரன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியான உணவு தானிய குழுமம் திட்டத்தின் கீழ் கோடைகாலத்தில் பயறு வகைகளை பயிரிடத் தேவையான தொழில் நுட்பங்கள் மற்றும் இதர தகவல்களை விவசாயிகளின் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று நடமாடும் முகாம்கள் மூலமாக தெரிவிக்கப்பட உள்ளது.

இந்த முகாம் மூலம் கோடை காலத்தில் பயறுவகைப் பயிர்களான உளுந்து, துவரை, பாசிப்பயறு, தட்டைப் பயறு போன்ற பயிர்களை பயிரிடத் தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் இடுபொருட்கள் விபரம் ஆகியவை தொடர்பாக விளக்கமளிக்கவும், காணொலி காட்சிகள் மூலம் தெரிவிக்கப்பட உள்ளது.

அதன்படி இந்த நடமாடும் முகாம்கள் இன்று (27ம் தேதி) காலை ஆதனக்கோட்டை மற்றும் குப்பையன்பட்டி கிராமங்களிலும், மதியம் திருமலைராயசமுத்திரம் மற்றும் தோப்புபட்டி கிராமங்களிலும் நாளை (28ம் தேதி) காலை ராஜகுளத்தூர் கிராமத்திலும், மதியம் வாகவாசல் கிராமத்திலும் நடத்தப்பட உள்ளன. எனவே அனைத்து விவசாயிகளும் இந்த முகாம்களில் கலந்து கொண்டு பயறு வகைகளை சாகுபடி

செய்து உற்பத்தியை பெருக்கி பயன்பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் ரவிசந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

**பந்தலூர், :** பந்தலூர் அருகே உப்பட்டி புஞ்சவயல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி அருகில் அமைந்துள்ள வேளாண் மை பொறியியல்துறை கட்டிடத்தில் பண்ணைக் கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது, வேளாண் பொறியியல்துறை மூலம் வழங்கப்படுகிற சலுகை குறித்து ஒருவாரகால பயிற்சி முகாம் நிறைவு விழா நடந்தது. வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணி தலைமை வைத்தார். உதவி மண்வள பாதுகாப்பு அலுவலர் சுந்தரலிங்கம் முன்னிலை வகித்தார் அத்திக்குன்னா நீர்பிடிப்பு பகுதி தலைவர் மூர்த்தி, பள்ளியின் தலைமை ஆசிரியர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து சான்றிதழ் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், சமூக ஆர்வலர் தேவதாஸ் உள்ளி ட்ட பலர் கலந்து கொண் டனர். இறுதியாக பயிற்சியாளர் சிவசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

**கோதுமை விவசாயத்தில் மீண்டும் நீலகிரி விவசாயிகள்**

**ஊட்டி, :** நீலகிரி மாவட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் வரை, கோதுமை, கேழ்வரகு (ராகி) ஆகிய பயிர்கள் பயிரிடப்பட்டு வந்தன. இந்த பயிர்கள் பயிரிட்ட காலம் முதல் அறுவடை காலம் வரை விவசாயிகள் மிகவும் கண்காணிப்புடன் இருக்க வேண்டியிருந்தது. கால்நடைகள், பறவைகள் மற்றும் காட்டு விலங்குகள் என அனைத்திடமும் இருந்து பாதுகாத்து வளர்க்க வேண்டியிருந்தது.இதனால் பெரும்பாலான விவசாயிகள் பராமரிப்பு குறைந்த தேயிலை விவசாயத்திற்கு மாறினர். ஒரு சிலர் மலை காய்கறி விவசாயத்திற்கு மாறினர். இதனால் நீலகிரி மாவட்டத்தில் கோதுமை, ராகி ஆயிவைகள் உற்பத்தி முற்றிலும் குறைந்தது.இங்கு வாழம் பழங்குடியின மக்கள், படுகர் இன மக்கள் மற்றும் இதர மக்கள் அனைவரும் மாதம் தோறும் ரேஷன் கடை மற்றும் வெளி மார்க்கெட்டில் கிடைக்கும் கோதுமைகளையும், ராகியையும் வாங்கி சமைக்க துவங்கிவிட்டனர். ஆனால் காலப்போக்கில் வெளியில் இருந்து வாங்கப்படும் கோதுமை மற்றும் ராகி போன்ற தானியங்களில் சத்து குறைந்து காணப்படுவதை மக்கள் உணர்ந்தனர். இதனை தொடர்ந்து ஒரு சில கிராமங்களில் மீண்டும் விவசாயிகள் தங்களுக்கு தேவையான அளவிற்காவது கோதுமை மற்றும்

ராகி போன்ற பயிர்களை பயிரிட துவங்கியுள்ளனர். தற்போது ஊட்டி அருகேயுள்ள கெந்தோரை பகுதியில் 50 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் பலர் கோதுமை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். கோதுமை அறுவடை காலம் துவங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## பெரம்பலூரில் மண் பரிசோதனை நிலைய மாற்றத்தால் விவசாயிகள் பரிதவிப்பு

**பெரம்பலூர், :** பெரம்பலூர் மாவட்டத்தில் மண் பரிசோதனை நிலையங்களை அதிகாரிகள் அடிக்கடி இடமாற்றம் செய்வதால் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண் துறை சார்பில் பெரம்பலூர் புதிய பஸ் நிலைய வடபுறத்திலுள்ள வெங்கடாஜலபதி நகரில் மண் பரிசோதனை நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று சாயில் டெஸ்ட் லேப் எனப்படும் ஒரே இடத்தில் உள்ள பரிசோதனை நிலையமாகவும், மற்றொன்று மொபைல் சாயில் டெஸ்ட் லேப் எனப்படும் பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லும் பஸ் வடிவில் உள்ள பரிசோதனை நிலையமாகவும் உள்ளது.இதில் மொபைல் சாயில் டெஸ்ட் லேப் எனப்படும் வாகனம் பெரம்பலூர், அரிய லூர் மாவட்டங்களுக்கும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் யாராவது விவசாயி கேட்டுக்கொண்டால் அவரது வயலுக்கே சென்று மண் மாதிரி எடுத்து அங்கேயே பரிசோதித்து மண்ணின் தன்மையை துல்லியமாக சொல்லக்கூடிய மண்பரிசோதனை நிலையமாகும். இந்த மொபைல் மண் பரிசோதனை நிலையத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு பெரும்பாலும் மண் பரிசோதனை செய்து தரப்படுவதில்லை. பெரம்பலூர் மாவட்டத்தில் மண்பரிசோதனைக்கு விண்ணப் பிக்கும் விவசாயி, வெங்கடாஜலபதி நகரிலுள்ள மண் பரிசோதனை நிலையத்திற்கே மண்ணை எடுத்துவந்து கொடுத்துத்தான் மண்ணின் தன்மையை அறிந்துசெல்ல முடி யும். இதனிடையே, வேளாண் இணை இயக்குநர் அலுவலகம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் கட்டி திறக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வேளாண் அதிகாரிகள் எடுத்த திடீர் முடிவால் வெங்கடாஜலபதி நகரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்த மண் பரிசோதனை நிலையமும் இந்த புதிய அலுவலகத்துக்கு மாற்றப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், மொபைல் மண் பரிசோதனை நிலையமாக இருக்கும் வாகனம் மட்டும், மாவட்ட மைய நூலகத்தை ஒட்டி ஏற்கனவே இணை இயக்குநர் அலுவலகமாகவும், தற்போது வேளாண் உதவி இயக்குநர் அலுவலகமாகவும் மாற்றப்பட்டுள்ள அலுவலக வளாகத்திற்குள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு பயன் தராத மொபைல் மண் பரிசோதனை நிலையம் புதிய பஸ் நிலையம் வெகு அருகிலும், முழுவதும் பயன்படக் கூடிய பெரம்பலூர் மாவட்டத்திற்கான மண் பரிசோதனை நிலையம் புது பஸ் நிலையத்தில் இருந்து 2

கி.மீ. தொலைவில் உள்ள புதிய வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்துக்கும் மாற்றப்பட்டுள்ளதால் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.பழைய பஸ் நிலையத்தில் இருந்து கலெக்டர் அலுவலகம் வருவதற்கே ஷேர் ஆட்டோவுக்கு ரூ.20 செலவு செய்யவேண்டியுள்ள விவசாயிகள், அங்கிருந்து மண்ணைத் தூக்கிக் கொண்டு அரை கி.மீ. நடந்து செல்ல வேண்டும் என்பதால் புலம்பி வருகின்றனர். எனவே, இதற்கு மாற்றாக மொபைல் மண் பரிசோதனை நிலையத்தை புதிய வேளாண் இணை இயக்குநர் அலுவலக வளாகத்திலும், பொதுவான மண்பரிசோதனை நிலையத்தை தற்போதுள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலக வளாகத்திற்கும் (மைய நூலகம் அருகே) மாற்றிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பெரம்பலூர் மாவட்ட சிறு, குறு விவசாயிகளுக்கு 50% மானியத்தில் வேளாண் கருவி வேளாண் அதிகாரி தகவல்

**பெரம்பலூர், :** பெரம்பலூரில் தோட்டக்கலைத் துறை சார்பில், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான், விசைத் தெளிப்பான், பேட்டரி தெளிப்பான் உள்ளிட்ட வேளாண் கருவிகள் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டு வருவதாக தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் (பொ) ஆனந்தன் தெரிவித்தார். பெரம்பலூர் மாவட்ட அளவில் சிறு, குறு விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் 50 சதவிகித மானியத்தில் தலா ரூ.5 ஆயிரத்து 350 மதிப்புள்ள பேட்டரி தெளிப்பான் கருவிகள், தலா ரூ.2 ஆயிரத்து 466 மதிப்புள்ள கைத்தெளிப்பான் கருவிகள், தலா ரூ.7 ஆயிரத்து 76 மதிப்புள்ள விசைத்தெளிப்பான் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி, பெரம்பலூர் துறைமங்கலம் ஒன்றிய அலுவலகத்தை ஒட்டியுள்ள தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விழாவில், தோட்டக்கலைத் துறை உதவி அலுவலர் கனகராஜ் சிறு குறு விவசாயிகளுக்கு பேட்டரி தெளிப்பான் கருவிகளை மானிய விலையில் வழங்கினார். விழாவில் வேளாண் உதவி அலுவலர்கள் இளையராஜா, வீரசிங்கம், இளங்கோவன் ஆகியோர் பங்கேற்றனர். பின்னர் இதுகுறித்து தோட்டக்கலைத் துறை உதவிஇயக்குநர்(பொ)ஆனந்தன்கூறியதாவது:பெரம்பலூர்மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை சார்பாக சிறு குறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் கைத்தெளிப்பான்கள், விசைத்தெளிப்பான்கள், பேட்டரி தெளிப்பான்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 26 பேருக்கு பேட்டரி தெளிப்பான்களும், 20 பேருக்கு கைத்தெளிப்பான்களும், 20 பேருக்கு விசைத்தெளிப்பான்கள் என மொத்தம் 66 பேருக்கு ஒரு மாதத்தில் ரூ3.3 லட்சம் மதிப்பிலான தெளிப்பான்கள் 50 சதவிகித

மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.இவற்றைப் பெற்ற விவசாயிகள் முறையாக பயன்படுத்தி, தோட்டக்கலை சாகுபடியில் அதிக லாபம் பெற்று பயன்பெற வேண்டும் என்றார்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் சிறப்பு தடுப்பூசி முகாம் மார்ச் 1 முதல் துவக்கம்**

**தஞ்சை,:** தஞ்சை மாவட்டத்தில் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின்கீழ் தடுப்பூசி முகாம் மார்ச் 1ம் தேதி முதல் 21 நாட்களுக்கு நடக்கிறது. தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் அனைத்து கிராமங்களிலும் உள்ள 88 லட்சம் பசுவினம் மற்றும் எருமை இனங்களுக்கு தடுப்பூசி போடபப்பட உள்ளது. இதற்காக ஊநீர் குளிரூட்டும் அறைகளில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படும் நாளில் தடுப்பூசி குழுவினர் மூலம் தொடர் குளிர் நிலையில் ஒவ்வொரு கிராமத்திலும் தற்போதுள்ள அனைத்து பசுவினம், எருமை இனங்களை கணக்கிட்டு தடுப்பூசி போடப்பட உள்ளது.இதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து கிராமங்களிலும் சிறப்பு கிராமசபை கூட்டம் நடத்தப்படுகிறது. கால்நடை நோய்களான அடைப்பான், சப்பைநோய், கோமாரி நோய், ஆட்டம்மை, துள்ளுநோய் ஆகியவை பரவலாக காணப்படுகிறது. இதனால் கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம், உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. தொற்றுநோயால் ஏற்படும் கால்நடை இறப்பு நேரடியான இழப்பை ஏற்படுத்துவதுடன் மறைமுகமாக கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, மலட்டுத்தன்மை, கருசிதைவு, வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் எடை குறைவு, எருதுகளின் வேலைத்திறன் குறைவு, கறவை மாடுகளில் சினைபிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகளால் ஏற்படும் பொருளாதார இழப்பு அதிகமாக உள்ளது. எனவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களது பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் 6 மாதத்திற்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் தங்கள் பகுதியில் தாக்கும் தொற்றுநோய்களுக்கு போடப்படும் தடுப்பூசியை தவறாது போட்டு கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

## புதுவையில் 3ம் தேதி தொடக்கம் கோமாரி நோய் இலவச தடுப்பூசி முகாம்

**புதுச்சேரி, :** புதுவையில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் இலவச தடுப்பூசி முகாம்வருகிற 3ம் தேதி தொடங்குகிறது.இதுகுறித்து புதுவை அரசு கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் பத்மநாபன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மத்திய அரசு வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கோமாரி நோய் இலவச தடுப்பூசி முகாம் புதுவை யில் 6வது கட்டமாக வருகிற 3ம்தேதி முதல் 28ம் தேதி வரை நடக்கிறது.இதையொட்டி கால்நடை வளர்ப்போரின் வீடுகளுக்கு நேரடியாக சென்று அங்குள்ள மாடுகளுக்கு புதுவை அரசு கால்நடை துறையினர் கோமாரி தடுப்பூசியை இலவசமாக போடவுள்ளனர்.எனவே புதுவை மாநிலத்தில் உள்ள கால்நடைவளர்ப்போர் தங்களுடைய கால்நடைகளை கோமாரி என்ற கொடிய நோயி லிருந்து பாதுகாத்து கொள்ள தடுப்பூசி போடுவதற்காக தங்கள் வீடு தேடிவரும் கால்நடை பராமரிப்பு துறை தொழில்நுட்ப ஊழியர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும், கால்நடை வளர்ப்போர் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் துறை இயக்குனர் பத்மநாபன் கேட்டுக்கொண்டுள்ளார். கோமாரி நோய் தடுப்பூசி முகாம் விவரம் வருமாறு: அரியாங்குப்பம், சிவராந்தகம் ஆகிய கால்நடை மருந்தகங்களுக்குட்பட்ட கிராமங்களில் வருகிற 3ம் தேதி முதல் 5ம் தேதி வரையும், வில்லியனூர், தட்டாஞ்சாவடி ஆகிய கால்நடை மருந்தகங்களுக்குட்பட்ட கிராமங்களில் 6, 7, 10, 11, 12ம் தேதிகளிலும், பாகூர் கால்நடை மருந்தகத்திற்குட்பட்ட கிராமங்களில் 13, 14, 17, 18, 19ம் தேதிகளிலும், மதகடிப்பட்டு கால்நடை மருந்தகத்திற்குட்பட்ட கிராமங்களில் 13,14, 17,18ம் தேதிகளிலும், கரியமாணிக்கம் கால்நடை மருந்தகத்திற்குட்பட்ட கிராமங்களில் 19, 20, 21, 24ம் தேதிகளிலும், திருக்கனூர் கால்நடை மருந்தகத்திற்குட்பட்ட கிராமங்களில் 20, 21, 24,25, 26ம் தேதிகளிலும், 24ம்தேதி முதல் 28ம் தேதி வரை தடுப்பூசி முகாம் நடக்கிறது.

தினத் தந்தி DAILY THANTHI

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கடந்த 32 ஆண்டுகளில் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோர் 50% அதிகரிப்பு**



கடந்த 32 ஆண்டுகளில் (1980–2011) இந்தியாவில் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோர் எண்ணிக்கை 50 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனையடுத்து, சர்வதேச அளவில் விவசாயத்தை சார்ந்து வாழும் மக்கள் தொகை வளர்ச்சியில் நம்நாடு முதல் இடத்தில் உள்ளது.

<u>இரண்டாவது இடம்</u>

இதே காலத்தில், சீனாவில் விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு வரும் மக்கள் தொகை 33 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது. இதனையடுத்து சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது. சீனா மற்றும் இந்தியாவில் ஒட்டுமொத்த அளவில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருவதே இதற்கு காரணமாகும்.

அமெரிக்காவில் பெரிய அளவில் இயந்திரமயமானது, மேம்பட்ட பயிர் ரகங்கள், உரங்கள், பூச்சி கொல்லிகள் மற்றும் அமெரிக்க ரிசர்வ் வங்கியின் சிறப்பு பண அளிப்பு நடவடிக்கை போன்ற காரணங்களால் அந்நாட்டில் விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் தொகை 37 சதவீதம் குறைந்துள்ளது.

2011–ஆம் ஆண்டு நிலவரப்படி, விவசாயம், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் மற்றும் காடு வளர்த்தல் உள்ளிட்ட விவசாயத்துறையை தங்களது வாழ்வாதாரமாக கொண்டுள்ளோர் மொத்த மக்கள் தொகையில் 37 சதவீதமாக உள்ளனர். இது 1980 ஆண்டு நிலவரத்தை காட்டிலும் 12 சதவீதம் குறைவாகும்.

<u>ஆப்பிரிக்கா</u>

1980–2011 வரையிலான ஆண்டுகளில் ஆப்பிரிக்க நாடுகளின் விவசாய சார்ந்த மக்கள் தொகை 63 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. அதே சமயம், விவசாயம் சாரா மக்கள் தொகை 221 சதவீதம் அதிகரித்துள்ளது. ஒசேனியாவில் விவசாய சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோர் எண்ணிக்கை 49 சதவீதமும், விவசாயம சாரா மக்களின் தொகை 65 சதவீதமும் உயர்ந்துள்ளது. ஆசியாவில் விவசாயம் சார்ந்தோர் மற்றும் விவசாய சாரா பிரிவினர் முறையே 20 மற்றும் 134 சதவீதம் அதிகரித்துள்ளனர்.

ஐரோப்பா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் மக்கள் கிராமங்களில் இருந்து நகரத்துக்கு இடம் பெயர்ந்ததால் விவசாயம் சார்ந்து வாழ்வோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் அதிகபட்சமாக 66 சதவீதமும், வடஅமெரிக்காவில் 45 சதவீதமும், தென் அமெரிக்காவில் 35 சதவீதமும், மத்திய அமெரிக்காவில் 13 சதவீதமும் விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் தொகை சரிவடைந்துள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் இன்று நடக்கிறது**



**காஞ்சீபுரம்,**

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கா.பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

காஞ்சீபுரம் மாவட்டத்தின் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் பிப்ரவரி மாதம் 21–ந் தேதி நடைபெறுவதாக இருந்தது. ஆனால் நிர்வாக காரணத்தினால் தள்ளிவைக்கப்பட்டது. இந்த நிலையில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு முக்கிய வேளாண்மைத்துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை அளிக்கலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்**



தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாடு சேலத்தில் நடந்த போது எடுத்த படம்.

**சேலம்,**

கடும் வறட்சி, விலை வீழ்ச்சியால் பாதிப்பு அடைந்துள்ளதால் விவசாயிகள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சேலத்தில் நடந்த மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விவசாயிகள் மாநாடு

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாடு சேலத்தில் நேற்று நடந்தது. மாநில தலைவர் சின்னசாமி தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் சுந்தரம், பொருளாளர் வேலுமணி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில், விவசாயிகள் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டும், அரசு நடப்பாண்டுக்கு அறிவித்த கரும்பு விலை மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. எனவே வெட்டு கூலியை ஆலையே ஏற்றுக்கொண்டு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும்.

விவசாயிகளின் கடன்கள்

கடும் வறட்சி, விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடன்களை திருப்பி செலுத்த இயலாத நிலையில் உள்ளனர். எனவே மத்திய, மாநில அரசுகள் விவசாயிகள் பெற்ற அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களை வறட்சியாக பாதிக்கப்பட்ட மாவட்டங் களாக தமிழக அரசு அறிவித் தது. பல மாவட்டங்களில் வறட்சி நிவாரணம் முழுமையாக வழங்கப்பட வில்லை. எனவே தொடர் வறட்சியால் தவிக்கும் விவசாயிகள் அனைவருக்கும் முழு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.

வனப்பகுதியையொட்டி உள்ள கிராமங்களில் யானைகள், காட்டுப்பன்றிகள் போன்ற வனவிலங்குகள் ஊருக்குள் புகுவதை தடுக்க வேண்டும் எனவும், உயிர் சேதத்திற்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

ஏரிகளில் நிரப்ப வேண்டும்

மேட்டூர் அணையின் உபரிநீரை சேலம், நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் அறிவித்து ஆய்வு பணிகள் நடத்தி உள்ள நிலையில் விரைவில் நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்ற வேண்டும்.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 120 அடிக்கு மேல் இருக்கும் போது, உபரிநீரை கால்வாய்கள் மூலம் மாவட்ட ஏரிகளுக்கு நிரப்பி விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கொளத்தூரில் மிளகாய் விளைச்சல் பாதிப்பு விலையும் குறைந்ததால் விவசாயிகள் கவலை**



கொளத்தூரை அடுத்த விராலிகாடு அருகே வெளி மாவட்டத்திற்கு அனுப்புவதற்காக மிளகாய் வற்றல் குவிக்கப் படுவதை படத்தில் காணலாம்.

கொளத்தூரில் பருவமழை பொய்த்ததால் மிளகாய் விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும், அதன் விலையும் குறைந்ததால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

காரம் மிகுந்த மிளகாய்

சேலம் மாவட்டம் மேட்டூரை அடுத்துள்ள கொளத்தூர் பகுதியில் 6 மாத பயிரான மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இங்கு விளையும் மிளகாய்க்கு ஒரு தனித்துவம் உண்டு. அதாவது, இந்த பகுதியில் பயிரிடப்படும் மிளகாய் காரம் மிக்கதாகவும், சமையலுக்கு சுவையை கூட்டுவதாகவும் உள்ளது. இதனால் இந்த மிளகாயை வற்றலுக்காக வாங்க தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் கொளத்தூருக்கு வந்து செல்கின்றனர்.

நடப்பாண்டியில் கொளத்தூர் வட்டாரத்தில் 548 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய் பயிரிடப்பட்டது. ஆனால், பருவமழை பொய்த்ததால் இந்த பகுதியில் மிளகாய் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. ஆடிப்பட்டத்தில் பயிரிடப்பட்ட நாட்டு மிளகாய், ஓட்டு வகைகளான ரோசினி, யு.எஸ்.344 ஆகிய ரக மிளகாய்கள் மழையின்மை காரணமாக வளர்ச்சியற்று காய்கள் சிறுத்து காணப்படுகிறது. இதன்மூலம் கிடைக்கும் மிளகாய் வற்றலும் தரம் குறைந்ததாக உள்ளது.

விலை குறைந்தது

இதனால் சந்தையில் இந்த மிளகாய்களை நல்ல விலைக்கு விற்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. சீசன் தொடக்கத்தில் மிளகாய் வற்றல் ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரை விற்பனையானது. ஆனால், தற்போது கிலோ ரூ.80-ஆக விலை

குறைந்துள்ளது. மேலும், இனி அறுவடை செய்யப்படும் மிளகாயும் தரம் குறைந்து சந்தைக்கு வரும் என்பதால் விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

இதற்கிடையே, மேட்டூர் நீர்த்தேக்கப்பகுதிகளில் முழுவடை பாசனம் மூலம் ஏக்கர் கணக்கில் மிளகாய் பயிரிடப்பட்டு உள்ளது. இதனால் கொளத்தூர் சந்தைக்கு மிளகாய் வரத்து இன்னும் சில வாரங்களில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்வு 330 காசுகளாக நிர்ணயம்**



**நாமக்கல்,**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 325 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 330 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–360, ஐதராபாத்–321, விஜயவாடா, தனுகு–324, பார்வாலா–347, மும்பை–359, மைசூர்–352, பெங்களூர்–347, கொல்கத்தா–375, டெல்லி–355.

கறிக்கோழி கிலோ ரூ.69–க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.54–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

**நாமக்கல்லில் ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**



**நாமக்கல்,**

நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு, துணைத் தலைவர் நல்லதம்பி மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னி லையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட் டங்களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 7 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 700 முதல் ரூ.5 ஆயிரத்து 9 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி முதல் தரம் ரூ.6 ஆயிரத்து 500 முதல் ரூ.7 ஆயிரத்து 100 வரைக்கும், 2–ம் தரம் ரூ.5 ஆயிரத்து 200 முதல் ரூ.5 ஆயிரத்து 780 வரைக்கும், சுரபி ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 600 முதல் ரூ.5 ஆயிரத்து 779 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு சிறப்பு பரிசு கலெக்டர் ராஜேஷ் வழங்கினார்



பால் உற்பத்தியாளர்களுக்கு காசோலைகளை மாவட்ட கலெக்டர் ராஜேஷ் வழங்கினார். அருகில் ஆவின் தலைவர் தென்னரசு உள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூடுதலாக பால் உற்பத்தி செய்து சங்கங்களுக்கு வழங்கிய பால் உற்பத்தியாளர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்களை கலெக்டர் ராஜேஷ் வழங்கினார்.

பால் உற்பத்தி

தமிழக முதல்-அமைச்சரின் ஆணைக்கிணங்க இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகமாக பால் வழங்கிய உற்பத்தியாளர்களை பாராட்டி ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்கி, அதிகமாக பால் உற்பத்தி செய்த 300 பால் உற்பத்தியாளர்களுக்கு காசோலை களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார். அவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்களின் முதல் 100 பேருக்கு ரூ.3 ஆயிரம் மற்றும் 3 நட்சத்திர அந்தஸ்துக்கான சான்றிதழும், 2-ம் இடம் பெற்ற 100 பேருக்கு ரூ.2 ஆயிரம் மற்றும் இரண்டு நட்சத்திர அந்தஸ்துக்கான சான்றிதழும், 3-ம் இடம் பெற்ற 100 பேருக்கு ரூ.ஆயிரம் மற்றும் 1 நட்சத்திர அந்தஸ்துக்கான சான்றிதழும் வழங்கப்பட்டது.

ரூ.6 லட்சம்

மேலும் ஒருங்கிணைந்த தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.6 லட்சம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மட்டும் 153 பேருக்கு காசோலைகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் கலெக்டர் ராஜேஷ் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன், தர்மபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் எஸ்.தென்னரசு, பொது மேலாளர் கொம்பையன், துணைப் பதிவாளர் (பால் வளம்) தர்மபுரி மற்றும் ஒன்றிய விரிவாக்க அலுவலர்கள், சங்கச் செயலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் துணைப் பொதுமேலாளர் நாகராஜன் நன்றி கூறினார்.

**சிறுவாணி அணையின் நீர்மட்டம் 25 அடி குறைந்தது 3 மாதத்துக்கு தண்ணீர் வினியோகம்குறையாது என அதிகாரி தகவல்**



**கோவை,**

சிறுவாணி அணையின் நீர்மட்டம் 25 அடி குறைந்தது. இருந்தாலும் இன்னும் 3 மாதத்துக்கு தண்ணீர் வினியோகம் குறையாது என்று குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி கூறினார்.

<u>சிறுவாணி அணை</u>

கோவை மாநகராட்சி பகுதிக்கு குடிநீர் ஆதாரமாக சிறுவாணி, பில்லூர் அணைகள் உள்ளன. வறண்டு கிடந்த சிறுவாணி அணைக்கு கடந்த மே மாதம் கடைசியில் இருந்து பெய்யத்தொடங்கிய தென்மேற்கு பருவமழை கைகொடுத்தது.

இதனால் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மட்டும் 17 தடவை நிரம்பி வழிந்துள்ளது. அவ்வாறு நிரம்பி வழியும் தண்ணீர் கேரளாவுக்கு சென்று கடலில் வீணாகியது.

இதைத் தொடர்ந்து சிறுவாணி அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் எடுத்து கோவைக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டது. இதனால் கோவை மாநகராட்சியில் உள்ள 100 வார்டுகளில் சிறுவாணி குடிநீர் கிடைக்கும் 30 வார்டுகளில் 2 நாட்களுக்கு ஒருமுறையும் பிற பகுதிகளில் 4 நாட்களுக்கு ஒரு முறையும் குடிநீர் வினியோகம் நடைபெற்று வருகிறது.

<u>25 அடி குறைந்தது</u>

இந்த நிலையில் தென்மேற்கு பருவமழை முடிவடைந்து, வடகிழக்கு பருவமழை தொடங்கியது. ஆனால் அந்த மழை எதிர்பார்த்த அளவில் கைகொடுக்கவில்லை. சிறுவாணி அணையின் (மொத்த கொள்ளளவு 50 அடி) நீர்மட்டம் குறிப்பிட்ட மாதங்கள் வரையே குறையாமல் இருந்தது. அதைத் தொடர்ந்து மள, மளவென குறையத்தொடங்கி, தற்போது 25 அடி குறைந்து உள்ளது.

இது குறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

<u>3 மாதத்துக்கு பிரச்சினை இல்லை</u>

தற்போது அணையின் நீர்மட்டம் 25 அடி குறைந்துள்ளது.ஆரம்ப காலத்தில் அணையில் இருந்து தினசரி 101 எம்.எல்.டி அளவு வரை தண்ணீர் எடுக்கப்பட்டது. அந்த தண்ணீர் தற்போது 99 எம்.எல்.டி அளவுக்கு குறையாமல் எடுக்கப்பட்டு கோவைக்கு சப்ளை செய்யப்படுகிறது.

இந்த நிலையில் இன்னும் 3 மாதத்துக்கு கோவையில் சிறுவாணி குடிநீர் பிரச்சினை இருக்காது. தண்ணீர் வினியோகத்திலும் தட்டுப்பாடு வராது. அதன் பிறகு மழை வந்துவிடும் என்பதால் தொடர்ந்து பிரச்சினை ஏற்பட வாய்ப்பிலை.

இருந்த போதிலும் அணையில் இருந்து தண்ணீர் எடுக்கும் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு, தண்ணீர் பிரச்சினை ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்கூறினார்.

**கறிக்கோழி உற்பத்தி குறைந்தது கேரளாவில் கோழி வளர்ப்பு தொழில் தீவிரம் எதிரொலி**



**கோவை,**

கேரளாவில் கோழி வளர்ப்பு தீவிரம் அடைந்துள்ளதால், கோவை, திருப்பூர் மாவட்ட பகுதிகளில் உள்ள பண்ணைகளில் கறிக்கோழி உற்பத்தி குறைந்துள்ளது.

<u>25 ஆயிரம் பண்ணைகள்</u>

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் விவசாயத்துக்கு அடுத்தப்படியாக, சில இடங்களில் கறிக்கோழிப்பண்ணை தொழிலே முதன்மையான தொழிலாக உள்ளது. சுமார் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பண்ணைகளில் கறிக்கோழி உற்பத்தி தொழில் நடைபெறுகிறது. முன்னணி குஞ்சு உற்பத்தி நிறுவனங்கள் தாய்க்கோழி பண்ணைகள் மூலம் குஞ்சுகளை வளர்ப்பதற்கு பண்ணையாளர்களுக்கு சப்ளை செய்கின்றனர்.

அதனை பண்ணைகளில் விவசாயிகள் குறிப்பிட்ட நாட்களில் கறிக்கோழியாக வளர்த்து கொடுத்து கூலி பெறுகின்றனர். இதை நம்பி கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட பகுதிகளில் பண்ணையாளர்கள், கோழிப்பண்ணை கூலி தொழிலாளர்கள் என ஆயிரக்கணக்கில் உள்ளனர். இந்த நிலையில் மேற்கண்ட மாவட்டங்களில் உற்பத்தியாகும் கறிக்கோழிகள் கடந்த ஆண்டுவரை வாரம் ஒன்றுக்கு 35 லட்சம் என கேரளாவுக்கு விற்பனைக்காக அனுப்பப்பட்டு வந்தது. இந்த ஆண்டில் இதன் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது. இது குறித்து விவசாயிகள், கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர் சங்க செயலாளர் எம்.ஈஸ்வர மூர்த்தி கூறியதாவது:–

<u>நுழைவு வரி</u>

தமிழ்நாட்டில் இருந்து கேரளாவுக்கு செல்லும் கோழிகளுக்கு தற்போது நுழைவு வரி கிலோவுக்கு 95 ரூபாய் என நிர்ணயம் செய்து, ரூ.13.77 பைசா விதிக்கப்படுகிறது. குஞ்சுகளுக்கு ரூ.35 நிர்ணயம் செய்து ரூ.5.20 விதிக்கப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டில் இருந்து கேரளாவுக்கு செல்லும் கோழிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து, கேரளாவிலே பண்ணைத்தொழில் வளரத்தொடங்கிவிட்டது. கோவை பகுதிகளில் உள்ள குஞ்சு பொரிப்பு நிறுவனங்களும் அங்குள்ள பண்ணைகளில் குஞ்சுகளை வளர்ப்பதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட பகுதிகளில் உள்ள பண்ணைகளில் கறிக்கோழி வளர்ப்பு தொழில் கடும் பாதிப்படைந்து வருகிறது.

<u>உற்பத்தி குறைந்தது</u>

ஆண்டுக்கு 6 தடவை உற்பத்தி நிறுவனங்கள் பண்ணைகளில் கறிக்கோழி குஞ்சுகளை கொடுத்து வந்தனர். அது தற்போது 3 தடவையாக குறைத்து விட்டனர். இதனால் பண்ணைகளில் கறிக்கோழி உற்பத்தியும் குறைந்து விட்டது. இது தவிர கேரளாவில் கறிக்கோழி உற்பத்திக்கு தேவையான முட்டைகள் தமிழ்நாட்டில் இருந்து அதிகளவில் செல்கிறது. நுழைவு வரி காரணமாக குஞ்சுகள்அனுப்புவது குறைந்து உள்ளது. மேலும் இங்குள்ள பண்ணைகளில் ஆட்கள் பற்றாக்குறை, தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது. இதனால் பண்ணையாளர்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**வழக்கத்தை விட முன்கூட்டியே அமராவதி சர்க்கரை ஆலையில் அரவையை தொடங்க வேண்டும் கரும்பு விவசாயிகள் கோரிக்கை**



திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தலைமையில் விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம் நடந்த போது எடுத்தபடம்.

**திருப்பூர், -**

அமராவதி சர்க்கரை ஆலையில் வழக்கத்தை விட முன்கூட்டியே அரவையை தொடங்க வேண்டும் என்று தாரா புரம் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

விவசாயிகள் கூட்டம்

திருப்பூர் மாவட்ட அளவில் மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நேற்று காலை நடந்தது. கூட்டத்துக்கு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தலைமை தாங்கினார்.

மாவட்ட வருவாய் அதி காரி பாரிவேல், இணை இயக் குனர் (வேளாண்மை) முகமது கலிமுல்லா செரீப், துணை இயக்குனர் சந்தான கிருஷ் ணன், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் பாபு, கலெக்டரின் நேர்முக உதவி யாளர் அல்தாப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட் டத்தில் திருப்பூர் மாவட்டத் தில் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாய சங்க, பாசன சபை நிர்வாகிகள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண் டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசிய போது கூறியதாவது:-

பி.ஏ.பி.யில் தண்ணீர் திருட்டு

பி.ஏ.பி. வாய்க்காலில் திறந்து விடப்படும் தண்ணீர் கடைமடையை வந்து அடை வதில்லை. இதற்கு காரணம் பல்வேறு பகுதிகளில் பி.ஏ.பி. வாய்க்காலில் திருட்டுத்தன மாக குழாய் அமைத்து பலர் தண்ணீர் திருடி வருகிறார்கள். எனவே பி.ஏ.பி.யில் தண்ணீர் திருடுவதை தடுக்க வேண் டும்.

பல்லடம் அருள்புரம் பகுதி யில் ஏராளமான பிரிண்டிங் நிறுவனங்கள் உள்ளன. இந்த நிறுவனங்கள் முறையாக கழிவு நீரை சுத்திகரித்து வெளியேற்றுவதில்லை. அதற்கு பதிலாக நிலத்தில் குழி தோண்டி கழிவு நீரை சேகரித்து வருகிறார்கள்.

பெயர்பலகைகள்

திருப்பூர் மாவட்டத்தில் செல்லும் மாநில நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் பெயர் பலகைகள் (கைக் காட்டி) இல்லை. இதனால் பலர் வழி தெரியாமல் திண் டாடி வருகிறார்கள். எனவே முக்கிய சாலைகளில் இருந்து பிரிந்து செல்லும் கிளை சாலைகளில் பெயர்பலகை வைக்க வேண்டும். திருப்பூர், பல்லடம் பகுதிகளில் உள்ள உழவர் சந்தைகளில் கழிப்பிட வசதி இல்லாததால் விவசாயி கள் மிகவும் அவதிப்பட்டு வருகிறார்கள்.

எள் சாகுபடிக்கு கீழ்பவானி அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும். நெல்சாகு படிக்கு பழைய பவானி பாசனத்துக்கு 5½ மாதமும், கீழ்பவானி பாசனத்துக்கு 4 மாதமும் தண்ணீர் திறக்கப்படு கிறது. நமக்கு நாமே திட்டத் தில் பொங்கலூர் அருகே கொலயான்குட்டையை தூர் வார வேண்டும். இதற்காக பொதுமக்கள் தங்கள் பங் களிப்பு தொகையாக ரூ.2 லட் சம் தர தயாராக உள்ளனர்.

<u>காயும் கரும்புகள்</u>

தாராபுரம் பகுதியில் 5 ஆயிரம் ஏக்கர் கரும்பு சாகு படி நடக்கிறது. இதில் 3 ஆயி ரம் ஏக்கர் கரும்பு வெல்லம் எடுப்பதற்கு பயன் படுத்தப் படுகிறது. மீதம் உள்ள 2 ஆயிரம் ஏக்கர் கரும்பு சர்க் கரை ஆலைக்கு பதிவு செய் யாமல் அரவைக்கு அனுப்பப் பட்டு வருகிறது. தற்போது வறட்சியால் இந்த 2 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட 10 மாத கரும்புகள் காய்ந்து போகும் நிலையில் உள்ளன.

இந்தநிலையில் அமராவதி சர்க்கரை ஆலை வருகிற ஏப் ரல் மாதம் 1-ந்தேதி அரவையை தொடங்க உள்ள தாக அறிவித்து உள்ளனர். எனவே திட்ட மிட்ட தேதிக்கு 15 நாட்களுக்கு முன்பே அம ராவதி ஆலையில் அரவையை தொடங்க வேண்டும். இல்லை எனில் இந்த கரும்புகளுக்கு விலை கிடைக்காது. தாரா புரம் மார்க்கெட் பகுதியில் வியாபாரிகளுக்கு அடிப்படை வசதி செய்து கொடுக்க வேண் டும்.

விவசாயிகள் கூறிய புகார் களுக்கு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் பதில் அளித்து பேசும் போது கூறியதாவது:-

<u>கடும் நடவடிக்கை</u>

தண்ணீர் திருட்டை தடுக்க அதிகாரிகள் இரவும், பகலு மாக கண்காணித்து வரு கிறார்கள். பி.ஏ.பி. வாய் காலில் திறந்து விடப்படும் தண்ணீரை திருட்டுத்தனமாக குழாய் மூலம் எடுத்து பயன் படுத்தக்கூடாது. அவ்வாறு பயன்படுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும்.

தற்போது கடும் வறட்சி நிலவி வருகிறது. கடும் கோடையில் குடிநீர் பிரச் சினையை சமாளிப்பதற்காக குடிநீருக்காக ரூ.505 கோடியே 85 லட்சம் ஒதுக்கப்பட்டுள் ளது. மேலும் கால்நடைகளுக்கு மலிவு விலை உலர்தீவனம் வழங்கும் மையம் வெள்ள கோவில், பூலவாடி, செங்கப் பள்ளி, காங்கயம் ஆகிய 4 இடங்களில் அமைக்கப்பட்டு இருந்தது. தற்போது கூடுத லாக பல்லடம், மடத்துக்குளம், தாராபுரம் ஆகிய 3 இடங் களில் புதிதாக உலர் தீவனம் வழங்கும் மையம் அமைக்கப் பட்டு பயன்பாட்டுக்கு வந் துள்ளது.

<u>பஞ்சமி நிலங்கள்</u>

பல்லடம் பகுதி கரைப்புதூர் ஊராட்சி அருள்புரத்தில் அனுமதி இன்றி இயங்கும் பிரிண்டிங் நிறுவனங்களை உடனே மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நட வடிக்கை எடுத்து, சீல் வைக்க வேண்டும். பஞ்சமி நிலங்கள் மீட்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம்.

நொய்யல் ஆற்றில் கோழி கழிவுகள் கொட்டுவதை உடனே திருப்பூர் மாநகராட்சி அதிகாரிகள் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லை என்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக் கப்படும். உழவர் சந்தைகளில் உள்ளாட்சி அதிகாரிகள் கழிப் பிடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அமராவதி ஆலை நிர்வாகத்துடன் பேசி முன்கூட்டியே கரும்பு அரவையை தொடங்க நட வடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் பேசினார்.

இதைத்தொடர்ந்து வட் டார வேளாண் உதவி இயக்குனர்கள் பயன்படுத்த தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா வழங்கிய 6 ஜீப்புகளை கலெக்டர் ஜி.கோவிந்தராஜ், சம்பந் தப்பட்ட உதவி இயக்குனர்களிடம் வழங்கினார்.

**நீடாமங்கலத்தில் இருந்து ஓசூருக்கு ஆயிரம் டன் நெல் அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது**



**நீடாமங்கலம்,**

நீடாமங்கலத்தில் இருந்து ஓசூருக்கு ஆயிரம் டன் நெல் அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

**<u>கொள்முதல் நிலையம்</u>**

மன்னார்குடி, நீடாமங்கலம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மற்றும் அரசு திறந்த வெளிக்கிடங்குகளில் இருந்த நெல் மூட்டைகள் நவீன அரிசி ஆலைகளுக்கு அரவைக்காக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன்படி நீடாமங்கலம் ரெயில் நிலையத்திலிருந்து சன்னரக நெல் ஆயிரம் டன் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூருக்கு அரவைக்காக சரக்கு ரெயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

**ஆயிரம் டன் நெல்**

இதுகுறித்து திருவாரூர் மாவட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி கூறியதாவது:-

திருவாரூர் மாவட்டத்தில் அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் நடைபெற்று வருகிறது. இதுவரை திருவாரூர் மாவட்டம் முழுவதும் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 3 லட்சத்து 47 ஆயிரத்து 671 டன் நெல் கொள்முதல் ஆகியுள்ளது.

நவீன அரிசி ஆலைகளுக்கு நெல் அரவைக்காக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. சன்னரக நெல் நீடாமங்கலம் ரெயில் நிலையத்திலிருந்து ஆயிரம் டன்னும், திருவாரூர் ரெயில் நிலையத்திலிருந்து ஆயிரம் டன்னும், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூருக்கு சரக்கு ரெயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## திருவாரூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் தலைமையில் நடந்தது



**திருவாரூர்,**

திருவாரூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் நடராசன் தலைமையில் நடந்தது.

**<u>விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்</u>**

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் நடராசன் தலைமை தாங்கினார். இதில் நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி, வேளாண்மை இயக்குநர் தனசேகரன், கூட்டுறவு சங்கங்கள் இணை பதிவாளர் ரவிச்சந்திரன், வெண்ணாறு கோட்ட செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், கலெக்டர் நேர்முக உதவியாளர் செல்வராஜ் (வேளாண்மை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பேசியதாவது:-

**<u>தடுப்புசுவர்</u>**

மாசிலாமணி:- கொள்ளிடம் ஆற்றினை போல வெட்டாறு வடிகாலாக இருந்து வருகிறது. வெட்டாற்றின் கரை பகுதியில் தடுப்பு சுவர் அமைக்கப்படுகிறது. 9 கிலோ மீட்டர் அமைக்க திட்டமிட்டு 1¢¢¢.9 கி.மீ பணிகள் நடைபெற்றுள்ளன. இந்த தடு¢ப்பு சுவற்றால் மிகப் பெரிய அளவில் வெள்ள பாதி¢ப்பு அபாயம் ஏற்படும். டெல்டா மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட உள்ள தொகையினை கட்டமைப்பு வசதிகளை முறையாக மேம்படுத்திட விவசாயிகளிடம் கருத்துக்களை கேட்டு பணிகளை நிறைவேற்றிட வேண்டும்.

ராமகிருஷ்ணன்:- வேளாண்மை துறைக்கு தமிழக அரசு நிதி ஓதுக்கீடு செய்துள்ளது. இதில் திருவாரூர் மாவட்டத்திற்கு அறுவடை இயந்திரம், நிலத்தினை சமப்படுத்தும் லேசர் இயந்திரங்களை வாங்கிட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எட்டியலூர், நீலக்குடி, பொம்மநத்தம் ஆகிய பகுதியில் படித்துறை மற்றும் மாடு இறங்குவதற்கான சாய்வு துறை ஏற்படுத்தி தர வேண்டும்.

பாலகுமாரன்:- பேரளத்தில் விவசாயிகள் அனைவரும் பயன் பெறும் வகையில் 108 ஆம்புலன்ஸ் வசதியினை ஏற்படுத்தி தர வேண்டும். தூர்வாரும் பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்றிட வேண்டும்.

**<u>நடமாடும் நெல் கொள்முதல் நிலையம்</u>**

தமிழ்ச்செல்வி: நடமாடும் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நிறைவேற்றி தந்த மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றியை தெரிவித்து

கொள்கிறேன். ஏ,பி.சி,டி போன்ற வாய்க்கால்களை 100 நாள் திட்டத்தின் மூலம் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். 100 நாள் வேலை திட்டத்தில் சம்பளம் உரிய காலத்தேில் வழங்கிட வேண்டும். கோடை காலம் வருவதால் குடிநீர் தட்டுப்பாடுன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்துல்ஹமீது: ஓடம்போக்கியாறு திருவாரூரில் இருந்து அடியக்கமங்கலம் வரும் பாதையில் உள்ள குப்பை கழிவுகள் கொட்டப்படுகிறது. இதனை அகற்றி தூர்வார வேண்டும்.

கோவிந்தராஜ்:- பயிர் நிவாரணம், பயிர் காப்பீட்டில் உள்ள முறைகேடுகளை களைய வேண்டும். சாகுபடி பரப்பளவு குறித்து உரிய கணக்கெடுப்பு செய்திட வேண்டும்.

கலெக்டர்:- திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஆறு, வாய்க்கால் முழுமையாக தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டத்தின் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் உலர் தீவனம்**



**பெரம்பலூர்,**

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கால்நடை வளர்ப் போருக்கு சத்திரமனை ஊராட்சியில் மானிய விலையில் உலர் தீவனம் வழங்கப்பட்டது.

**<u>மானிய விலையில் உலர் தீவனம்</u>**

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கால் நடை வளர்ப்போருக்கு சத்திர மனை ஊராட்சியில் மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற் றது.

இந்நிகழ்ச்சியில் கால்நடை வளர்ப்போர்க்கு மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் திட்டத்தை தமிழ்ச் செல்வன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்து பேசியதாவது:

**ரூ. 12 கோடியே 50 லட்சம்**

தமிழக முதல்–அமைச்சர், தமிழகத்தில் இரு பருவ மழையும் அநேக மாவட்டங் களில் பொய்த்து போன நிலையில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதார மான கால்நடை செல்வங்க ளின் தீவன பற்றாக்குறையை போக்க கால்நடை வளர்ப் போர் நலன் கருதி கால்நடைக ளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் தீவன கிடங்குகளின் மூலம் வழங்கிட ரூ. 12 கோடியே 50 லட்சம் முதல் கட்டமாக அனைத்து மாவட்டங்களுக் கும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை யின் மூலம் வறட்சி நிவாரணத் திட்டத்தில் சத்திரமனை உலர் தீவன கிடங்கு அமைத்திட ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கால் நடைகளுக்கு ஒரு கிலோ வைக்கோல் ரூ. 2 வீதம் மானிய விலையில் ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் அதிக பட்சம் 5 மாடுகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை 105 கிலோ தொடர்ச்சி யாக இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு வழங்க திட்ட மிடப் பட்டுள் ளது.

**பதிவு செய்ய வேண்டும்**

கால்நடை வளர்ப்போர் தங்களது ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் அளவு போட்டோ இரண்டு நகல் மற்றும் கால்நடைகளின் இருப்பு விபரம் ஆகியவற்றை அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண் டும். பதிவு செய்தவர்களுக்கு ‘‘கால்நடை தீவனம் வழங்கும் அட்டை’’ வழங்கப்படும். அவ்வட்டையை காண்பித்து சத்திரமனை தீவன கிடங்கில் மானிய விலையில் வைக்கோல் பெற்றுக் கொள்ளலாம்.

பெரம்பலூர் மாவட்டத்தில் சத்திரமனை தீவன கிடங்கு மூலம் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சி களில் உள்ள கால்நடைகளும், இரண்டாம் கட்டமாக வி.களத்தூர் கால்நடை மருந்தக வளாகத்தில் அமையும் தீவன கிடங்கு மூலம் 29 கிராம ஊராட்சிகளில் உள்ள கால் நடைகளும், கொளக்கா நத்தம் கால்நடை மருந்தக வளாகத் தில் அமையும் தீவன கிடங்கு மூலம் 39 கிராம ஊராட்சிகளில் உள்ள

கால்நடைகளும், பயன் பெற உள்ளது.இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில் பெரம் பலூர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் மருதைராஜா, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர்.சந்திரசேகர், உதவி இயக்குனர் மனோகரன், வேளாண்மைத் துறை இணைஇயக்குனர்(பொ) ஆல்பிரட் உள்ளிட்ட அலுவ லர்கள் பலர் கலந்து கொண் டனர்.

**மருவத்தூர் கிராமத்தில் விவசாயிகள் பயிற்சி மையம் கட்டும் பணி தொடக்கம்**

குன்னம்**,**

பேரளி ஊராட்சி மருவத்தூர் கிராமத்தில் உள்ள கூட்டுறவு வங்கி வளாகத்தில் 2013–2014 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் ரூ.25 லட்சம் செலவில் விவசாயிகள் பயிற்சி மைய கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டது. வேப்பூர் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். பேரளி ஊராட்சி தலைவர் துரைக்கண்ணு முன்னிலை வகித்தார். மருவத்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி தலைவர் பெரியசாமி வரவேற்றார். நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் பாரதிதாசன், வார்டு உறுப்பினர்கள் செல்லம் துரைசாமி, கலா செல்வம், பிரேமா ரங்கசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**புதிய சுண்ணாம்பு கல் சுரங்கங்களுக்கு அனுமதி வழங்க கூடாது கருத்து கேட்பு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**




**செந்துறை, -**

புதிய சுண்ணாம்பு கல் சுரங்கங்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று கருத்து கேட்பு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினார்கள்.

<u>கருத்து கேட்பு கூட்டம்</u>

அரியலூர் மாவட்டத்தில் 8-க்கும் மேற்பட்ட சிமெண்ட் ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு தேவையான சுண்ணாம்பு கற்கள் மாவட் டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து சுரங்கங்கள் அமைத்து வெட்டி எடுத்து வருகின்றனர். தற்பொழுது புதிய சுரங் கங்கள் அமைக்க விரும்பும் இடங்களில் வசிக்கும் விவ சாயிகளிடமும், பொதுமக்களி டமும் தமிழ்நாடு மாசுக்கட்டுப் பாட்டு வாரியம் கருத்து கேட்பு கூட்டங்களை நடத்தி வருகிறது. அதன்படி இந்த கருத்து கேட்பு கூட்டம் செந்துறையில் நடந்தது. கூட் டத்திற்கு மாவட்ட வருவாய் அதிகாரி கருப்பசாமி தலைமை தாங்கினார். தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் மற்றும் முன்னாள் ஊராட்சி தலை வர்கள் சாமிதுரை, நீலமேகம், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாது காப்பு சங்க இணை செயலாளர் அப்துல் ரகீம் மற்றும் விவசா யிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

<u>விவசாயம் பாதிப்பு</u>

கூட்டத்தில் கலந்து கொண்ட சிமெண்ட் ஆலைக்கு நிலம் வழங்கியவரும், விவசாயியுமான சக்திவேல் பேசியதாவது:-

சிமெண்ட் ஆலைகளால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது, சிமெண்ட் ஆலைகள் இங்கு உள்ள கனிம வளங்களை மட்டுமே சுரண்டுகிறது. நிலம் அளித்த யாருக்கும் வேலை வாய்ப்புகளை வழங்குவது இல்லை. இப்பகுதியில் வசிக் கும் பொதுமக்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நீர்நிலை புறம்போக்குகளை ஆக்கிரமித்து விவசாயிகளுக்கு கிடைக்கும் நீர் ஆதாரங்களை தடுக்கின்றனர். மேலும் விவசாய நிலங்களுக்கு செல் லும் பாதையையும் ஆக்கிர மித்து விடுகின்றனர். இதனால் இந்த மாவட்டத்தில் விவசா யம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

<u>அனுமதி வழங்க கூடாது</u>

கடந்த 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு எங்களது முன்னோர்கள் விவசாய நிலங்களை விற்று விட்டனர். ஜெயங்கொண்டம் நிலக்கரித் திட்டத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு 11 லட்சத்திற்கும் மேல் இழப்பீடு வழங்க வேண்டும் என்று நீதி மன்றம் உத்தரவிட்டு உள்ளது. ஆகையால் எங்களுக்கும் கூடுதல் இழப்பீடு வழங்கிவிட்டு திட்டத்தை தொடங்க வேண்டும். எனவே புதிய சுண்ணாம்பு கல் சுரங்கங்களுக்கு தமிழக அரசு அனுமதி அளிக்க கூடாது.

இவ்வாறு அவர் பேசினார். இந்த கருத்தை கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் பலரும் ஆதரித்து பேசினார்கள்.